அகில இலங்கை தமிழ் மொழித்தினம் -2022
வலப்பனை வலய தமிழ் மொழித்தினப்போட்டிகளின்
நிகழ்வையொட்டிய சிறப்பு மலர்

# தமிழமுதம்

## இதழ் ௦௧




நிகழ்விடம்-

வ/அருணோதயா இந்துக்கல்லூரி – கந்தப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழமுதம்"

இதழ் 01

அகில இலங்கை தமிழ் மொழித்தினம் - 2022
வலப்பனை வலய தமிழ் மொழித்தினப்போட்டிகளின்
நிகழ்வையொட்டிய சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழித்தின வாழ்த்து

வாழ்க தமிழ்த்தினம் வளர்க தமிழ்தினம்
வாழிய வாழியவே!
மாண்புறு முத்தமிழ் வித்தகரின் நினை
வாம் தினம் வாழியவே!
இலங்கையில் மாணவர் வளங்கொள் தமிழ்ப்பயிர்
இமயமெனப் பொலிய
ஏற்புறு முத்தமிழ் போட்டி பண்பாட்டின்
எழுச்சிக்கு வித்திடவே.
சங்கத் திருப்பினில் பங்கமி லாதிருந்
தாண்ட தமிழ் மொழியே
சால்புயர் கல்வித் தமிழ்மொழிப் பிரிவுயர்
தகைமைக்கு வித்திடவே
இந்து கிறிஸ்தவம் பௌத்தமிஸ் லாம்நெறி
ஏற்றம் மிகுந்த தமிழ்
எம்முன்னே தேசிய ஒற்றுமை நிலைபெறும்
எழில்தினம் வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராடும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கல்வியை நுகர்ந்து அறிவை விரிவாக்குவதற்கு மொழியாற்றல் இன்றியமையாதது. அவ்வகையில் தாய்மொழிக்கல்வி அறிவை செம்மையாக்குவதில் மிகத்திறன் வாய்ந்ததாகும். தமிழ் மொழியை வளப்படுத்துவதற்கும் தமிழ் இலக்கிய வளர்விற்கும் பல முயற்சிகள் பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

முத்தமிழ் வித்தகராம் சுவாமி விபுலானந்தரின் நினைவாக அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படுகின்ற தமிழ்மொழி தினப் போட்டிகள் தமிழ் இலக்கண, இலக்கிய வளர்ச்சிக்கு மிகுந்த முனைப்பை வழங்குகின்றன.


பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை பல படிநிலைகளில் நடாத்தப்படுகின்ற இப்போட்டிகள் மாணவர்களின் தமிழ்மொழித்திறனை மேம்படுத்துவதில் பெரும் பங்களிக்கின்றன.

வலப்பனை கல்வி வலயம், தொடர்ச்சியாக தமிழ்மொழித்தின விழாவை திறனுடன் நடாத்தி வருவதுடன் எமது வலயத்திலுள்ள பல மாணவர்களை மாகாண,தேசிய ரீதியில் அடையாளப்படுத்தியும் வருகின்றது. இதன் புதிய அங்கமாக இவ்வருடம் வலய மட்ட போட்டிகளின் சிறப்பான ஆக்கங்களை ஓர் சஞ்சிகையாக வெளியிடுவதற்கு மேற்கொண்ட முயற்சி வரவேற்கதக்கதாகும். தரமான மாணவர் ஆக்கங்களை அடுத்து வருகின்ற சமுதாயத்துக்கு கடத்துவதில் இம்முயற்சி திறம்பட உதவும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மொழி தின போட்டி இதழாக்கக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலய கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



வலப்பனை வலய கல்விப்பணிமனையின் தமிழ் மொழிப்பிரிவு அண்மைய கால்ங்களில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினூடாக சிறந்த பல பெறுபேறுகளை வலயத்திற்கு பெற்றுக்கொடுத்து வருகின்றமையை என்னால் அவதானிக்ககூடியதாக இருக்கின்றது.இதன் மூலம் பணிமனை சார் உத்தியோகத்தர்கள் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் யாவரும் மாணவர்களது கற்றலின் மீது கூடிய கவனத்தை செலுத்துவதனையும் மாணவர்களின் கற்றலின் போது தோன்றும் இடர்களை இக்கட்டான நிலையிலும் அதனை களைபவர்களாகவும் திகழ்கின்றனர்.இது சிறந்த ஒரு கல்வி அபிவிருத்திக்கான மகிழ்ச்சியான சமிக்ஞையாகும்.

அவ்வாறே கற்றலூடாக வளர்க்கப்படவேண்டிய மொழி வளர்ச்சி தொடர்பான செயற்பாடுகளுக்காக இவ்வாறான தமிழ் மொழித்தினப் போட்டிகள் அவசியமானவை. இதனூடாக ஒரு மொழிச்சமூகத்தின் கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் அடுத்த சந்ததியினருக்கும் இணைந்து வாழும் சந்ததியினருக்கும் கொண்டு செல்லக்கூடியதாகவும் இருக்கும்.

இதே நிலையில் இடம்பெறும் தமிழ்மொழித்தினப் பொட்டியின் போது மாணவர் ஆக்கங்களை தாங்கி வரும் வண்ணம் வெளிவரும் "தமிழமுதம்" என்ற சிறப்பு நூல் புதியதொரு சிறந்த ஆரம்பமாகும். இதனையொட்டி செயல்பட்ட இதழாக்க குழுவினருக்கும் நிகழ்வின் அமைப்பு குழுவினருக்கும் பங்குபற்றிய மாணவர்களிற்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**திரு.P.B.நவரட்ன**
**வலய கல்வி பணிப்பாளர்**
**வலப்பனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



ஒரு மனிதனை பூரணமாக்குவதற்கு அவசியமான தேவைப்பாடுகளுள் முக்கியமானது மொழியாகும். ஒருவருக்குத் தேவையான பல்வேறுவிதமான அறிவுகளையும் பெற்றுக்கொள்வதற்கு உதவும் ஊடகமாகவும் மொழியே திகழ்கிறது. அத்தகைய மொழி தொடர்பாக வலப்பனை வலயக் கல்விக் காரியாலயத்தின் தமிழ் மொழிப்பிரிவு தனது மாணவர்களின் ஆக்கங்களை கொண்டு வெளியிடுகின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உவகை அடைகிறேன். கடந்த காலங்களில் வலப்பனை கல்வி வலயமானது தமிழ் மொழிப்பாடப் பெறுபேறுகளில மாகாண மட்டத்தில் முதன்மை நிலையை அடைந்துள்ளது அதேபோல் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளின் பெறுபேறுகளிலும் முன்னணி வகிக்கின்ற வலயமாக தன்னை வளர்த்துகொண்டுள்ளது என்பதை குறிப்பிடுவதில் பெருமை கொள்கிறேன். அதன் அடுத்த படி நிலையாகவே நான் இம்மலர் வெளியீட்டை காண்கின்றேன்.

இத்தருணத்தில் இம்மலர் வெளிவர முன்னின்று உழைத்த வலயத்தின் சகல அன்புள்ளங்களையும் நெஞ்சார வாழ்த்தி பாராட்டுகின்றேன். மாணவர்களின் ஆற்றல்களையும் ஆக்கங்களையும் வளர்க்கும் வகையில் வலயப்பணிமனை எடுத்துள்ள இந்த முயற்சியை மாகாணத்தின் ஏனைய வலயங்களும் முன்னுதாரணமாகக் கொண்டு தங்கள் மாணவர்களின் படைப்பாற்றல்களை வளர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வது காலத்தின் தேவை என்பதை கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

வாழ்கத் தமிழ்! வளர்கத் தமிழ்!

**திருமதி.A.R சத்தியேந்திரா**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**கண்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழிப்பாட பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



வலப்பனை வலயக்கல்விக் காரியாலயத்தின் தமிழ் மொழிப் பிரிவு வெளியிடும் "தமிழமுதம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கல்விப்புலத்தில் குறிப்பாக மாணவர்களை இலக்காகக் கொண்டு அவர்களின் ஆக்கத்திறன்களையும் அறிவுத் தேடல்களையும் வளர்ப்பதோடு வலய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியோரை கௌரவிப்பதற்காகவும் பல்வேறு இலக்கிய அம்சங்கள் பொருந்தியதாக கனதியான படைப்புகளைத் தாங்கிவருகின்ற "தமிழமுதம்" சஞ்சிகையானது மாகாணத்தின் ஏனைய வலயங்களுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

பல்வேறு கடமைப் பொறுப்புக்களுக்கு மத்தியில் தன்னார்வமாக இப்பணியை ஏற்றுக்கொண்டு அதனை செவ்வனே நிறைவு செய்த வலப்பனை வலயக்கல்விக் காரியாலயத்தின் தமிழ்ப் பிரிவினருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு இச்சஞ்சிகை முழுச் சமுதாயத்திற்கும் இன்பமும் இனிய பயன்களும் நல்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு.பெ.விக்னேஸ்வரன்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**கண்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



அகில இலங்கை தமிழ் மொழித்தினம் வலப்பனையில் கொண்டாடப்படுகின்ற இத்தருணத்தில் இதை ஏற்பாடு செய்கின்ற ஏற்பாட்டுக் குழுவினருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வலப்பனை வலயமானது 2019,2020ஆண்டுகளில் மாகாணத்தில் உயர் தரத்திற்கு தகுதி பெற்றவர்களில் முதலாம் நிலையை பெற்று மிளிர்கின்றது.

அதேபோல் தமிழ் பாடமானது மகாணத்தில் முதலாம் நிலையில் உள்ளது. தொடரட்டும் உங்கள் வெற்றி.

இத்தமிழ் மொழித்தின சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நிகழ்வு சிறப்புற வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.வே.யோகராஜா**
**கோட்டக்கல்வி பணிப்பாளர்**
**வலப்பனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



மொழி என்பது தொடர்பாடலுக்கான ஒரு ஊடகம் என்பதற்கு மேலதிகமாக அதனைப்பயன்படுத்தும் மொழிசார்ந்த சமூகத்தின் கலை கலாச்சார பண்பாட்டுக் கோலங்களை தாங்கி வந்து மக்களின் வாழக்கையை செம்மைப்படுத்தும் அழிவில்லா பெரும் செல்வமாகும். இத்தகைய சிறப்பு பொருந்திய மொழிகளில் ஒன்றான செம்மொழியாம் எம் தமிழ் மொழி அது தோன்றிய காலம் முதல் இயல் இசை நாடகம் என்றவாறு பல்வேறு இலக்கிய அம்சங்களுடன் அது தனக்கென தனித்துவத்துடன் வளர்ந்து இன்று உலகளாவிய ரீதியில் வியாபித்து நிற்கின்றது. இத்தகைய நிலையில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நினைவாகக் கொண்டாடப்படும் தமிழ் மொழித்தின செயற்பாடுகள் தமிழ் மொழி வளர்ச்சிக்கான சிறந்ததொரு வாய்ப்பாக எனலாம்.

இவ்வாற நிலையில் எமது வலப்பனை வலய மாணவர்கள் 2021இல் க.பொ.த (சா/த)பரீட்சையில் பெற்றுக்கொண்ட தமிழ் மொழிக்கான நூறு வீத சிறந்த பெறுபேறுகள் மத்திய மாகாண வலயங்களில் முதல் நிலையினைப் பெறுவதற்கான சிறந்த சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. இது எமது வலயத்தில் தமிழ் மொழிவளர்ச்சியின் உறுதித் தன்மையையும் தமிழ்மொழியினரான எமக்கும் கௌரவத்தையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது எனலாம். இதன் பங்களிப்பாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

மேலும் இந்த சந்தர்ப்பத்தில் எமது வலய தமிழ் மொழி மற்றும் கல்விசார் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்து வரும் மத்திய மாகாண தமிழ் மொழிப்பிரிவு அதிகாரிகளுக்கும் எமது வலய பணிப்பாளர் அவர்களிற்கும் ஏனைய கோட்ட கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பணிப்பாளர் குழாத்தினருக்கும் ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளிட்ட அதிபர் ஆசிரிய குழாத்தினருக்கும் நன்றி கூறும் அதேவேளை குறிப்பாக இன்றைய தமிழ்மொழிப் போட்டிகளின் நிகழ்வுகளிற்கும் முழுமையான பங்களிப்பை வழங்கிய அருணோதயா இந்துக் கல்லூரி அதிபர் திரு.டயஸ்குமார் உள்ளிட்ட ஆசிரிய மாணவர்களிற்கும் அமைப்புக்குழுவின் தலைவர் செயலாளருள்ளிட்ட குழுவினரிற்கும் இவ்வேளை வாழ்த்தினையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பது பொருத்தமானது என நினைக்கின்றேன்.

அதே வேளை இவ்வருட மொழித்தினப் போட்டிகளின் மற்றொரு விசேட அம்சமாக வலய மட்ட போடடிகளில் முதல் நிலைகொண்ட மாணாக்கரின் ஆக்கங்களை தாங்கியவாறு முதன் முதலாக “தழிழமுதம்” என்ற மலர் ஒன்றும் வெளியிடப்படுவது குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். இவ்வாறான அச்சிறப்பு மலர் உருவாக பல்வேறு சிரமத்திற்கு மத்தியிலும் உழைத்த இதழாக்க குழுவினர் அனைவருக்கும் பாராட்டுதல்களை தெரிவிப்பதோடு தொடர்ந்து எம் மாணவர்கள் மாகாண தேசிய மட்டங்களிலும் தமிழ்மொழித் தினப் போட்டிகளினன் வெற்றியாளர்களாகவும் திகழ எனது வாழ்த்துக்கள்.

**கந்தையா காந்தரூபன்**
**உதவி கல்விப்பணிப்பாளர்**
**(தமிழ் மொழிக்கான வலய பொறுப்பாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



"வளரட்டும் தமிழ்மொழிப் பணி"

மொழி என்பது மானிடத்தின் பிரதான சக்தி மனிதனின் அறிவு மனப்பாங்கு உணர்வுகள் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் மிக முக்கியமான ஊடகமாக மொழி காணப்படுகின்றது. மனித எண்ணங்கள் மூலம் உருவாக்கப்படும் கலாசாரமானது மொழியை பிரதிபலிப்பதயே நாம் யாவரும் அறிந்ததே....

மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கும் சிறப்பான வாழ்க்கைக்கும் அவசியமானது அவன் பேசும் மொழி தான். இந்த அடிப்படையில் " தமிழமுதம்" சஞ்சிகையானது மாணவர்களது மொழித்தேர்ச்சியை ஊக்குவிக்கும் முகமாகவும் மொழித்திறன்களை வெளிக்கொணரவும் எழுத்தாற்றல் திறனை மேம்படுத்தவும் அகில இலங்கை தமிழ் மொழித்தின வலயமட்ட போட்டிகளின் போது முதலிடம் பெற்ற மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி 2022 ஆம் ஆண்டு முதல் சஞ்சிகையாக வெளிவருகின்றமையை மிகவும் ஒரு உயர்ந்த பணியாக நான் கருதுகின்றேன்.

"தமிழமுதம்" சஞ்சிகையை தயாரித்து பிரசுரிக்க சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்கின்றேன்.

**திரு.S. ஜனார்த்தனன்**
**ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)**
**வலய கல்வி பணிமனை**
**வலப்பனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



தமிழுக்கு நிகர் இல்லை காண்.....

குழந்தையின் கற்றலானது தாயின் வயிற்றிலிருந்து தொடங்குகின்றது. தாயைப்போல தாய்மொழியும் பிள்ளையின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் இன்றியமையாதது. அந்த வகையில் மொழியின் ஆற்றலை வளர்ப்பதில் இணைப்பாட விதான செயற்பாடுகள் முக்கியம் பெறுகின்றன. பாடசாலை மட்டத்தில் மொழிவளர்ச்சியினூடாக ஆளுமைமிக்க பல்வேறு செயற்பாடுகள் இடம் பெறுகின்ற நிலையில் தமிழ் மொழித்தினம் முக்கியம் பெறுகின்றது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நினைவாகக் கொண்டாடப்படும் இவ்விழாவில் பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த இலக்கிய தளம் கிடைக்கிறது. வலப்பனை வலயத்தில் நீண்ட காலமாக தமிழ்மொழித்தினப் போட்டிகள் சீரிய முறையில் நடைமுறைபடுத்தப்பட்டு வருவதோடு மாணவர்களின் இயல், இசை, நாடகத் திறனும் மேம்படுகிறது. இந்த வகையில் இம்முறையும் வலப்பனை வலய தமிழ் மொழித்தினப் போட்டிகள் சிறப்புற நிகழவும் முதலிடம் பெற்ற ஆக்கங்களை நூலுருவாகக் கொண்டுவரவும் உழைத்த அனைவருக்கும் அகம் நிறைந்த பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

**திரு.மை. பன்னீர் செல்வம்**
**தலைவர்**
**தமிழ் மொழித்தினம் 2022(வலப்பனை)**
**அதிபர்**
**நு/இராகலை உயர் (தேசிய) பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

அகில இலங்கைத் தமிழ்மொழித் தினத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களின் மொழியாற்றல் மற்றும் திறனை வளர்க்கும் நோக்கில் வருடம் தோறும் நடத்தப்படும் வலய மட்டத்திலான தமிழ்மொழித்தின போட்டியானது 2022 ஆண்டு வலப்பனை வலயத்தில் சிறப்பு அம்சத்தினை கொண்டதாக அமைந்துள்ளது. எமது வலயத்தில் இந்நிகழ்வினை ஆவணப்படுத்தும் நோக்கில் சிறப்பு மலரினை குறித்த தினத்தில் வெளியிடுவது சிறப்பான அம்சமாகும். இதனால் வலயத்தில் உள்ள மாணவர்களின் எதிர்காலப் பங்குபற்றுதலுக்கு இது உறுதுணையாக அமையும் என நம்புகிறேன்.

இந்நிகழ்வினை சிறப்பாக ஏற்பாடு செய்த தமிழ்மொழிக்குப் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.K.காந்தரூபன், ஆசிரியர் ஆலோசகர், திரு S.ஜனார்த்தனன் மற்றும் தமிழ் மொழித்தின தலைவர் திரு.M.பன்னீர்செல்வம் (அதிபர்) உள்ளிட்ட ஏற்பாட்டுக்குழுவினர், இதழாக்க குழு உறுப்பினர்கள் வலயத்தின் அதிபர்கள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் இவ்விழா சிறப்பாக அமையவும் மாணவர்களது தமிழ் மொழித்திறன் வளரவும் வாழ்த்துக்கள்.

திரு.L. ஜோசப் (அதிபர்)
செயலாளர் தமிழ் மொழித்தின ஏற்பாட்டுக்குழு
(மமா/வ/டலோஸ் த.ம.வி )



## பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

**“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்”**

“உள்ளத்திலே உண்மையொளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்” என பாரதி சொல்வான்.

ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் உண்மை ஒளி உண்டாகவும் சிந்திக்கவும் படைப்பாற்றல் திறன் வளரவும் ஒவ்வொரு மனிதனுக்கும் தமக்கென ஒரு தாய்மொழி அவசியம் வளமான தாய்மொழியினை கொண்ட ஒவ்வொரு சமூகமும் இன்று வளம் பெற்றுள்ளது.வளமும் செழுமையும் கொண்ட எம் செம்மொழியாகிய தமிழின் காரணமாக நாம் வளம் பெற்று பெருமையுடன் வாழ்கின்றோம். சீரிளமை திறத்துடன் வளர்ந்து கொண்டிருக்கும் எமது தமிழ் தாயை வளர்க்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் குடியினதும் முதற் கடமையாகும் கல்வி அமைச்சின் தமிழ் பிரிவு அதனை கருதி ஒவ்வொரு வருடமும் முத்தமிழ் வித்தகரது நினைவு தினமாகிய ஜுலை 19 ஆம் திகதியை அகில இலங்கை தமிழ் மொழி தினமாக கொண்டாடி வருகின்றது. எமது மாணவர்களுக்கு முத்தமிழையும் விதைத்து அதனை வளர்த்தெடுக்கும் பணி போற்றுதற்குரியது.

தே மதுர தமிழை மாணவர் ஆக்கங்களாக சுமந்து வரும் தமிழ் அமுதம் நூல் வெளியீட்டை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்நூல் மாணவர்களுக்கு ஒரு ஊக்குவிப்பாகவும் எதிர்கால மாணவர் சமூகத்திற்கு பெரும் பயனாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தமிழ் தின போட்டி நிகழ்வுகள், நூல் வெளியீடு என்பன சிறப்பாக அமைய முன் நின்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.M.டயஸ்குமார் (அதிபர்)
பொருளாளர் தமிழ் மொழித்தின ஏற்பாட்டுக்குழு
வ/அருணோதயா இந்து கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை ஆக்கம் பிரிவு 5 : முதலாம் இடம்
ச. என்டன் சார்ள்ஸ்
மமா/வ/மஹாஊவா தமிழ் மகா வித்தியாலயம்

## மரணித்ததே மனிதநேயம்

காணாமல் போய்
கன நாட்கள் ஆனபோதும்
கண்ணீர் அஞ்சலியை
காணவில்லை.
கண்ணீர் பற்றி
தெரிந்திருந்தால் காணாமல்
போய் இருக்காது என
தோணவில்லை.

மனிதரிடத்திலே மலையளவு
காணப்பட்ட மனிதநேயம்
சில மனப்பதர்களினாலே
மறைந்து போனது...
என்ன மாயம்!

'தனக்கு' என்ற எண்ணமே
மனித நேயத்தை மறைத்தது.
'தன்னோடு இருக்கும் ஏனையோர்'
என்ற உணர்வை கரைத்தது.

மனித மனத்திலே மாண்டு
போன ஒன்று
மறவாது இதனை அறியலாம்
2009ல் அன்று.

போற்றுதற்குரிய பெண்களை
கற்பழித்து, கொலைச்செய்த
மிருகத்திற்கோ நியாயம்
உண்மையுடன், உரிமைக்காக
போராடிய மெய்த்தமிழர்
மக்களுக்கோ காயம்
இதனாலே தொடக்கம்
முதல் இல்லை இவனுக்கு,
மனிதநேயம்.

மனிதநேயம் அன்று மாய்ந்த இடம்
மனித மனதோ என்றும் மறவாத தடம்

பாதுகாப்பால்,
மறைந்த தலைவன் மீண்டும் வருவான்.
மரணத்தால்,
மறைந்த தலைவன் மீண்டும் எப்படி வருவான்?

என்று கண்ணீர் சொரியவைக்கும்
பழங்கால மனிதநேயம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழங்கால மனிதநேயம்...

மாறிவிட்டான், தேறிவிட்டான்
என்றால், இல்லை;
அன்று ஆயுத வன்முறை
இன்று அஹிம்சை வன்முறை

தன்னை விட ஒரு வயது
உயர்ந்தவராக இருப்பினும்
அக்கா, அண்ணா என்று
அழைப்பதே பண்பு
அப்பொழுதுதான் வளரத்தொடங்கும்
அனைவரிடத்திலும், மனிதநேயம்
என்ற பண்பு.

மனிதநேயமே ஒருவனை
முழு மனிதனாக செதுக்கும்
அத்தியாவசியமான உளி
மனிதநேயம் இன்மையால்
இன்று பல உயிர்கள்
அனாவசியமாக பலி

மனதில் உதிக்கும் உயர்ந்த,
உன்னதமான கொடை
மனதிலிருந்து வெளிப்பட்டாலும் மனிதன்
விதிப்பான் அதற்கு தடை

மனிதநேயம் இருக்குமிடத்தில்
பேதம் இருக்காது
மனிதரிடத்தில் சுயநலம் என்ற
வாதம் இருக்காது

மனிதநேயத்தை மறந்து
சுவாசிப்போர், மனிதர்கள்
மனிதநேயத்தை உயர்வாக
நேசிப்போர், புனிதர்கள்.

ஜாதி, இனம், மதம் மனிதநேயத்தை
வளரவிடாது காக்கின்றன
பெரியார், அம்பேத்கர் போன்றோரின் சிந்தனை
மனிதநேயம் வளருமா? என பார்க்கின்றன.
மாறாத மாண்புடைய மனிதரிடத்தில்
காணப்படக்கூடிய மனிதநேயம்
மாற்று சிந்தனையில், மாற்றம் கண்டு
மாய்ந்து போகின்றதே!
என்ன நியாயம்!

சமூக பிராணியான மனிதரிடத்தில்
காணப்படவேண்டிய, அவசியமான
அறம்
சிறந்த, நல்ல பண்புடைய
சமூகத்தை கட்டியெழுப்ப அவசியமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை கட்டியெழுப்ப அவசியமான
உரம்

இவ்வாறு சிறப்புற்றாலும் மானிடர்கள்
இதனை தள்ளுகிறார்கள் ஒரு புறம்
மெய்யாகவே மானிட சமூகத்திற்கு
கிடைத்த அற்புதமான ஒரு வரம்

ஆகவே,

பிஞ்சு குழந்தைகளை வதைத்து
துஷ்பிரயோகம் செய்பவனே!
உழைப்பாளிகளை சிதைத்து
ஊதியத்தை கொய்பவனே!
வறியோரை வதைத்து
வறுமையை தந்தவனே!
பலரின் சொத்துக்களை சிதைத்து
நரக துன்பத்தை தந்தவனே;
எண்ணிலடங்கா பொய்களை உரைத்து
ஏராளமானோரை நகைத்தவனே!
வீட்டில் உள்ளோருக்கு தெரியாது, மறைத்து
பொருந்தாதவற்றை புகைத்தவனே!
ஒரு சிறு புன்னகையின் நிமித்தம்
மனம் நோக சிதைத்தவனே!
தான் என்ற அகந்தையின் நிமித்தம்
ஒருவனை வாட்டி வதைத்தவனே!

தவறென தெரிந்தும் அதனை செய்து
சரியென தெரிந்தும் அதனை செய்யாது
பல அப்பாவி உயிர்களை பறித்த கொடியவனே!
மனிதநேயம் மாண்டு போன மனித சமூகமே!

நன்கு கேள்...

மனிதநேயம் என்ற மலரை
சிறுவயது முதல் வளர்க்க தொடங்கு
தனக்கு பொருந்தாத தவறான
செயலை செய்யாது தவிர்க்க தொடங்கு.
பெரியோர்க்கு நீ அடங்கு
நன்மை தரும் அது பல மடங்கு

மரணித்ததே மனிதநேயம் என்ற எண்ணக்கருவை மாற்று
உயிர் மறைந்தாலும் மனிதநேயம் மறையாது என்ற
நீரை ஊற்று
மனிதநேயம் படைத்தவனே கடவுள் என
போற்று

இவ்வுலகின்
கடைசி மனிதன் மாண்டு போகும் மட்டும்
பண்புள்ளம் மனிதநேயத்தை புறக்கணிக்காது
மனிதநேயம் ஒருபோதும் மரணிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை 5ம் பிரிவு
Y.மதுஷா
மமா/வ/அருணோதயா இந்து கல்லூரி
கந்தப்பளை

## தமிழ்மொழியில் பிறமொழிச் செல்வாக்கு

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிப்போல்
இனிதாவதெங்கும் காணோம்"

என்ற முண்டாசு கவிஞனின் கூற்று வாய்மையானது ஒன்று என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆம் உலகமொழிகளில் மூத்த மொழியே எம் தாய்மொழியான தமிழ்மொழி. இம்மொழி பிற மொழிகளுடன் ஒப்பிடும்போது மிகவும் இனிய மொழியாகும். அதனைத்தான் கவிஞர் பாரதி இவ்வரிகளினூடாக எம் அகக்கண்களுக்கு தெளிவுறுத்துகிறார். அன்றைய காலம் தொட்டு இன்றைய நவீன யுகம் வரை தமிழ்மொழி பேசப்பட்டு கொண்டுதான் வருகிறது.

இருப்பினும் இத்தமிழ் மொழியானது பிறமொழிகளுடன் கலப்புப் பெற்று வருவதே குறிப்பிடத்தக்க விடயமாகும். தமிழ் என்பது ஓர் தனித்துவம் பெற்ற மொழி. "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்று பறைசாற்றிய தமிழன் இன்று பிறமொழியின் செல்வாக்கினால் தமிழை தாழ்வுறுத்துகிறான். அன்றைய காலத்தில் புலவர்கள், அறிஞர்கள், பண்டிதர்கள் என பலர் தமிழை போற்றி வளர்த்தனர். எடுத்துக்காட்டாக வள்ளுவ பெருந்தகையை சான்றுப்படுத்த முடியும். தமிழின் புகழை பறைசாற்றும் ஓர் அற்புத படைப்பை எமக்கு அள்ளித்தந்தவர் இவரன்றோ கதைகதையாக கூறிய நற்கருத்துக்களை இரண்டு அடிகளில் கூறுவதற்கு அவருக்கு துணைப் புரிந்தது தமிழே என்று உரத்துக்கூறமுடியும்.

மேலும் ஓர் எடுத்துக்காட்டாக குறிப்பிடப்படுபவர் கவிபுலவன் கம்பன். "யாமறிந்த கவிஞரிலே கம்பனை போல் ஒருவனை காணேன்" என்ற அடியை இச்சந்தர்ப்பத்தில் நினைவுறுத்தி கொள்ள வேண்டும். இன்று கம்பராமாயணம் எனும் மகாகாவியத்தை தமிழில் படிக்கிறோம் என்றால் அதற்கு தூண்டுதலாக இருந்தவர் இவர்தானே. அதுமட்டுமா? இலக்கியங்கள், கவிப்படைப்புக்கள் என பலவற்றை எமக்கு விருந்தாக அளித்துள்ளார். இவை யாவற்றிலும் கலந்திருப்பது தமிழே.

அதனால்தான் என்னவோ மனிதன் கருத்துக்கள் இல்லாத இலக்கியங்களாக தமிழை பிறமொழிகளுடன் கலப்புற்று பயன்படுத்துகிறான் இன்றைய தமிழன் தமிழில் இல்லாத சொற்களா, கருத்துக்களா இல்லை இலக்கியங்களா? பின்னர் தமிழனுக்கு பிறமொழி மோகம் எதற்கு? என்ற கேள்வி எமக்கு எழுகின்றதல்லவா? இதற்கு பிரதான காரணம் எம் தமிழனிடத்தில் உள்ள ஆங்கில மோகம். இது உண்மை என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆங்கிலமொழியே பிரதானமாக தமிழ்மொழியில் கலப்புற்றிருக்கும் மொழியாக காணப்படுகின்றது. ஆங்கிலேயர் என்று தமிழனை ஆட்சி செய்யும் நோக்கில் எம் நாடுகள் நோக்கி வந்தனரோ அன்று ஏற்பட்ட பிறமொழி கலப்பு இன்றுவரை எம்மிடத்திலிருந்து நீங்கவில்லை. அக்காலக்கட்டத்திலும் கூட தமிழை தனித்துவமிக்கதாக போற்றி வளர்க்க "தமிழுக்காக தலை வணங்கும் என் சிரம்" என்று கூறி எழுந்தவர்கள் நாவலரும், விபுலாநந்த சுவாமிகளும். இன்றைய நவீன உலகில் நாவலரும், சுவாமிகளும் இல்லையே, இருந்திருந்தால் தமிழ் பிறமொழிகளுடன் இணைந்திருக்குமா? பிறமொழி கலப்பால் தமிழில் ஊற்றெடுத்த பலச்சொற்கள் அருகிச் சென்று விட்டன. இன்று நாம் எமது பிறந்த நாளை கொண்டாடுவதற்கு "கேக்" என்ற உணவுப்பொருளை வாங்குகின்றோம் அல்லவா? அதன் தமிழ் பெயர் யாருக்காவது தெரியுமா? தெரியாது இதுதான் தமிழ் சொல் என எல்லோரும் நம்புகிறோம். "பிஸ்கட்" என்பதற்கு "அனிச்சல்" என்ற சொல்தான் தமிழ் வடிவம் என்பது எம்மில் எத்தனை பேருக்கு தெரியும் இவையும் பிறமொழி செல்வாக்கின் விளைவால் தோற்றம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமா? நாம் சொகுசாக பயணிப்பதற்காக உருவாக்கப்பட்ட போக்குவரத்து சாதனமே "கார்" இன்று எவராவது "மகிழுந்து வாங்க வந்திருக்கின்றோம்" என்று கூறுகின்றார்களா? இல்லை காரணம் தமிழில் ஊடுருவியுள்ள பிறமொழியான ஆங்கிலம் இன்று உலகமொழியென ஆங்கில வழிக்கல்வி, ஆங்கிலம் படித்தால்தான் வேலை என்று கூறி எம்தமிழன் தமிழையே இல்லாது செய்கின்றான். இதனை நாம் உணர்வது அவசியமாகும்.

மேலும் கூறுவதானால் தமிழ் வழிக்கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு கூட இன்றைய தமிழன் விரும்பவில்லை. ஆங்கில வழிக்கல்வியை பெற்றுக்கொடுக்க முனைகின்றனர். "தமிழுக்கு அமுது என்று பேர்" அவ்வமுதத்தில் உள்ள ஒரு சொல்தான் "அம்மா" இப்போது பிறமொழி செல்வாக்கினால் அம்மா என்ற சொல்லுக்கே அர்த்தம் மாறிவிட்டது. "மம்மி" என்றல்லவோ அழைக்கின்றான் தமிழன். இவ்வாறு பிறமொழி கலப்பால் தமிழ் கொஞ்சம் கொஞ்சமாக சீரழிந்து செல்கிறது என்பது அப்பட்டமான உண்மை என்பது எம் அகக்கண்களுக்கு புலப்படும்.

மேலும் இதனை தெளிவுறுத்துவதற்காக எம் தாய்நாடான ஈழத்திருநாட்டின் தற்கால சமுதாயத்தை நோக்க முடியும். "கல் தோன்றா மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி" என்று அக்காலத்தே பாடப்பெற்றது, அவ்வாறு பெயர் பெற்றுள்ளது என்றால் அதற்கு காரணமாக அமைவது தமிழில் உள்ள பிறமொழி கலப்பின் செல்வாக்காகும். தமிழன் ஆட்சி செய்து தமிழ் போற்றி வளர்த்த நாடு இன்று சிங்கள மொழியாலும், சிங்களவர் ஆட்சியாலும் சீரழிந்து வருகிறது. சிங்களம் ஊடுருவினாலும் தமிழை காக்க வேண்டியது எம் கடமை அல்லவா? இருப்பினும் இது இயலாத காரியம் ஆகிவிட்டது காரணம் சிங்களம் கற்றால்தான் சிங்கள மொழி பேசினால்தான் இலங்கையர் என நாம் கருதப்படுவோம். இந்நிலைதான் தமிழுக்கும் தமிழனுக்கும் என்றால் இது வேதனைக்குரிய விடயமாகும்.

இப்பிறமொழி செல்வாக்கின் மூலம் தமிழ்மொழி மேலும் சீரழிந்தே செல்கிறது. தமிழின் வகைகள் மூன்று அதனைத்தான் முத்தமிழ் என்கிறோம். இயல், இசை, நாடகமே இவை இவற்றில் இசை என்பது மிகவும் முக்கியமானது. இனிப்பிற்கு மயங்காதவன் கூட இசைக்கு மயங்கி விடுவான். அவ்வளவு சிறப்பு மிக்கது தமிழிசை இதனையே "தென்பொதிகையில் தவழ்ந்த மொழி" என சான்றோர் வலியுறுத்துகின்றனர்.

இக்காலக்கட்டத்தில் பிறமொழி என்பது இசையிலும் பாரியளவு செல்வாக்கு செலுத்தியுள்ளதல்லவா? இக்கால இசையை கேட்கக்கூடிய வகையில் இல்லை என்றுதான் கூறமுடியும். இசை என்பது இனிமை பயக்கும் வகையில் அமைய வேண்டும். இரைச்சலாக இருக்கக்கூடாது. இதற்கு எடுத்துக்காட்டாக தற்காலத்தில் பாடப்பட்ட "அரபிக்குத்து" என்ற பாடலை கூறமுடியும். இதில் தமிழ் இருக்கின்றதா? அரபுமொழி இருக்கின்றதா என்பதே சந்தேகத்திற்குரியது. இசையின் இலக்கணத்தையே மாற்றி விட்டது பிறமொழி இவ்வாறு பலவற்றை எடுத்துக்கூற முடியும். எமது தாய் மொழி தமிழையே முழுமையாக, தனித்துவமாக பயன்படுத்த முடியாத நிலை தமிழனுக்கு ஓர் அவமானமாகும். இதனை அண்ணா அறிஞர் அவர்கள் மிக அழகாக எடுத்துக்கூறியுள்ளார். "தமிழும் இவ்வையகத்தில் இழைத்து விட்ட தவறொன்றும் உள்ளது அது தமிழனுக்கு தாய் மொழியாய் வாய்த்ததே" என்றார். தமிழ் தமிழனுக்கு தாய்மொழியாக வாய்த்திருக்காமல் பிறநாட்டவனுக்கு தாய்மொழியாக வாய்த்திருந்தால் இக்காலத்திற்கு அகிலமொழி என உருவெடுத்திருக்கும் எம் தமிழ்மொழி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தமிழன் தமிழன் என உரக்க சொல்கின்றோமே தமிழை தனித்துவமாக பயன்படுத்துவதில் மட்டும் ஏன் தயக்கம் காட்டுகின்றோம். பிறமொழி கலப்பின்றி பயன்படுத்துவதில் ஏன் சிரமப்படுகின்றோம். தமிழனாய் பிறந்து தமிழ் பேசாமல் வேற்று மொழியை பேசுகின்றோமே அதுதான் வெட்கப்படவேண்டிய விடயம். பிறமொழி ஊடுருவலால் தமிழ் இப்போது தமிழனிடத்திலே பின்தள்ளப்பட்ட செல்லுமாயின் பின்னர் எவ்வாறு உலக நாடுகளில் வளர்ச்சி பெறும் என்ற சந்தேகமே இன்று எழுகிறது. இன்றைய நவீன யுகத்தில் வேற்று மொழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதென்பது கட்டாயமானதொன்றே. இது அறிவுப்பசிக்காக மாத்திரமே அமையவேண்டுமே தவிர தமிழை வீழ்ச்சி அடைய செய்யும் நோக்கில் அமைந்துவிடக்கூடாது.

எனவே பிறமொழி தமிழில் ஊடுருவியுள்ளமை தமிழை வீழ்ச்சியடைய செய்வதாகவே அமைகிறது. இதனை கருத்திற் கொண்டு செயற்படுவது தமிழன் என்ற வகையில் எமது தலையாய கடமையாகும். சங்கம் வைத்து வளர்த்த சங்கத்தமிழை என்றும் மங்கிபோகாத வகையில் வளர்த்தெடுக்க நாம் பாடுபடுவோம். இதற்காக நாம் கம்பனை போலும், கவிஞர் பாரதியார் போலும் மாறவேண்டிய அவசியமில்லை அவர்கள் எமக்கு போதித்த தமிழ் இலக்கியங்கள், தமிழ் மரபுகள், தமிழ் சிறப்புக்களை அடுத்த சந்ததியினருக்கும் கொண்டு சென்றாலே போதும். பிறமொழி பயன்பாட்டால் எம் மூத்த தமிழை இன்றே அடியோடு புதைத்து விடாமல் என்றும் சிறப்பு பெற்று வளர்ச்சியுற வழிவகுப்போம்.

**இலக்கியம் நயத்தல்**

**மையக்கருத்து**

வாசிக்கும் போதே மனதை சிலிர்க்க வைக்கும் இப்பாடலானது நயக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. இப்பாடலை நோக்குவோமானால் கவிஞர் எதனை வலியுறுத்தி நிற்கிறார் என்பதை எம் அகக்கண்கள் சிறிதளவேனும் எம் சிந்தனைக்கு புலப்படுத்தும். அதாவது இவ்வையகத்தில் அடிமைத்தனமாக வாழும் எம் ஏழை விவசாயிகளை உத்வேகம் ஊட்டும் வண்ணமாக அமைந்ததே இப்பாடலாகும். அதாவது தினந்தோறும் கண்ணீர் சொரிகின்ற ஏழை உழவர்களின் வாழ்க்கை இனி இன்பமாகவே அமையும் என்பதை கவிஞர் எடுத்தியம்பியுள்ளார். இதனையே

"தொழுது தெஞ்சும் அடிமைவாழ்வின் துயரதுன்பம் யாவுமே!

தொலைந்தொழிந்து போகுது! குலைந்துசாம்பல் ஆகுது!"

என்ற வரிகள் மூலம் கவிஞர் தெளிவுறுத்துகிறார்.

**கையாண்ட உத்திகள்**

ஏழை உழவர்களின் வாழ்வை வளம்பெற செய்வதற்காக எழச்செய்யும் நோக்கில் அமைந்த இப்பாடலில் பல்வேறு உத்திகள் கையாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக எளிய மொழிநடை பிரயோகம், அணிக்கையாளுகை, இயற்கை அம்சங்களை நயந்து கூறும் பாங்கு, வர்ணனை பாங்கு என்பவற்றை விதந்துரைக்கமுடியும். "வழி நடக்க வருகவே! வளமை கொள்ள வருகவே! பொழுது புலரும் வேளையாச்சு! போகவேணும் வருகவே! இப்பாடல் வரியை நோக்குவோமாயின் கவிஞரின் கவிப்புலமை புலப்படும் அதாவது பொழுது விடியும் நேரமாகிவிட்டது. எமது வழிப்பார்த்து நடந்து வல்லமை பெறுவதற்கு வரவேண்டும் என்கிறார். இதன்மூலம் கவிஞர் கையாண்ட எளிய மொழிநடை பிரயோகம் புலப்படுகிறது.

மேலும் ஏழை விவசாயிகள் வாழ்வு வளம் பெறவேண்டுமெனில் அவர்கள் எவ்வாறு எழ வேண்டுமென்பதை புலப்படுத்தும் நோக்கில் அணிப்பயன்பாட்டை மேற்கொண்டுள்ளமை கவிஞரின் ஓர் உத்தியாகவே எடுத்தியம்பப்படுகிறது. "கண்மயக்கும் இருள், சமுத்திரங்கள் திரண்டெழுந்த தன்மை போல" போன்றவற்றை இதற்கு ஆதாரங்களாக முன்வைக்க முடியும்.

கவிஞரின் கவிப்பாங்கை மேலும் செம்மைப்படுத்தும் விதமாக இயற்கை விடயங்களை ஏழை விவசாயிகளின் எழுச்சிக்காக வடிவமைத்துள்ளமை. நயக்கத்தக்க ஓர் விடயமாகும். கருமுகில்கள், காற்று, இருள், சமுத்திரங்கள், ஆறுகள் என்பவை இயற்கை அம்சங்கள் இவற்றை ஏழைகளின் வாழ்வோடு பின்னிப்பிணைத்து காட்டியுள்ள கவிப்புலமை சிறப்பிற்குரியது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக கருமுகில்கள் கலைந்து போக காற்றெழுந்து வீசுது என்ற வரிகளை நாம் முன்வைக்க முடியும்.

மேலும் கவிஞரின் கவித்திறத்தை வெளிப்படுத்துவதற்காக வர்ணனை பாங்கை ஓர் உத்தியாக கையாண்டுள்ளார். இருள் என்பது நீங்குவது சாதாரணமான ஓர் விடயமாகும். இது இயற்கையின் சுழற்சி ஆனால் அதனை கவிஞர் "கண்மயக்கும் இருள் விளக்கு விண்ணில் வெண்மை காணுக" என கூறியுள்ளார். இருளை இவ்வுலகமானது வெண்மை காண்கிறது என்றும் வர்ணித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியுள்ளமை புலப்படுகிறது. இவ்வாறு பல எடுத்துக்காட்டுகள் மூலம் கையாண்ட உத்திகளை விதந்துரைக்கமுடியும்.

**அணிகள்**

இப்பாடலில் பல்வேறு அணிகள் கையாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சாதாரணமாக இருள் என்பதை நாம் பயத்தை வெளிக்காட்டும் ஓர் அம்சமாகவே காண்கிறோம். ஆனால் இருளை கண்மயங்க செய்யக்கூடியது என்று உயர்த்தி கூறியுள்ளார். அதாவது கண்மயங்கும் இருள் என குறிப்பிடப்படுகிறது. இதனூடாக உயர்வு நவிற்சி அணி கையாளப்பட்டுள்ளமை எமக்கு புலப்படும்.

ஏழை விவசாயிகள் தன்வாழ்வை வளம் பெற செய்ய எவ்வாறு எழவேண்டும் என்பதை குறிப்பிடும் விதத்தினூடாக உவமை அணி கையாளப்பட்டுள்ளமை எமக்கு புலப்படக்கூடும். "சமுத்திரங்கள் திரண்டெழுந்த தன்மை போல வருகவே" என்ற வரி இதற்கு சான்றாகும். சமுத்திரம் எவ்வாறு அலைகளை எழுப்பிக்கொண்டு திரண்டு வருகிறதோ அதுப்போல ஏர்ப்பிடித்து செல்லும் விவசாயிகளும் எழ வேண்டும் என உவமித்து கூறியுள்ளமை நயக்கத்தக்கது.

மேலும் உவமை அணிக்கையாளுகையை வெளிப்படுத்தும் வண்ணமாக "எழில் மணிக் கரங்கள் கொட்டி ஊறுபோல வருகவே" என்ற வரிகள் அமைகிறது. அதாவது ஏர்ப்பிடித்து எமது பாரதத்தை காத்தருளும் விவசாயிகள் ஏறுபோல நிமிர்ந்து நடக்கவேண்டும் என உவமித்து காட்டியுள்ளமை சிறப்பானதொன்றாகும்.

இப்பாடலில் மேலும் ஓர் அணிக்கையாளுகையாக உருவக அணி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆற்றினை தடுத்து அணைக்கட்டி நீர்ப்பாய்ச்சும் விவசாய தோழர்களின் மேனியை அரும்பு என உருவகித்து அரும்புமேனி என கூறியுள்ளார். கவிஞர் இவ்வாறு அணிகையாளுகை மேற்கொள்ளப்பட்டுள்ளமை இதனூடாக புலப்படக்கூடும்.

**நயந்த பகுதி**

இப்பாடலை முழுவதுமாக பாடும்போதே எம் நெஞ்சில் ஓர் உவகை தோன்றும். இருப்பினும் நான் நயந்தப்பகுதியாக பின்வரும் கவிப்பகுதியை கூறவிழைகிறேன்.

"நாற்று நட்டு நடவு செய்து நாடுகாக்கும் நங்கையீர்
சேற்றினில் பதிந்த பாதம் திகழ இங்கு வருகவே!
ஆற்றினைத் தடுத்தணைகள் ஆக்குகின்ற தோழர்கள்
அரும்பு மேனி வேர்வை மின்ன அணிவகுத்து வருகவே"

இப்பாடல் வரிகளானவை விவசாயிகளின் சிறப்பினை வெளிப்படுத்தும் வண்ணமாக அமைகிறது. எம் நாட்டையே பஞ்சத்திலிருந்து போக்கும் புண்ணிய காரியத்தினை மேற்கொள்பவர்கள் இவ்விவசாயிகள் அவர்களின் சிறப்பை பறைசாற்றும் விதமாக அமைவது மிகவும் நயக்கத்தக்கதாகும். இந்நாட்டையே காக்கும் மாமனிதனே இவ்விவசாயி என்பதை வெளிப்படுத்தும் கவிஞரின் கவிப்புலமையும் இக்கவி வரிகளில் புலப்படுகிறது. எனவே இவ்வாறான காரணங்களை செம்மைப்படுத்தி காட்டுவதனூடாக இது நயக்கத்தக்க வகையிலானது என்பது விதந்துரைக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி.கிருஸ்ணஹர்ஷா**
**தரம் 11**
**மமா/வ/இராகலை உயர் பாடசாலை**

# கானல் நீர்

**காட்சி 1**

மேடையமைப்பு

| | | |
|---|---|---|
| இடது மேல் | மேல் மத்தி | வலது மேல் |
| இடது மத்தி | மத்திய மத்தி | வலது மத்தி |
| இடது கீழ் | கீழ் மத்தி | வலது கீழ் |

களம் :- ஒரு குட்டி வீடு (நெல்லியடி கிராமம்)
கதை மாந்தர்கள் :- சுப்பையா (வீட்டுத் தலைவர்)
முள்ளையம்மா (சுப்பையாவின் மனைவி)
முரளி (சுப்பையாவின் மகன்)

ஒலி :-(மேடையின் பின்திரையில் மெல்லிய ஒலியுடன் கவலையை காண்பிக்கும் விதமான வயலீன் ஓசை, வீணையின் ஓசைகள் ஒலிக்கப்படல்.) (பசியுடன் வறுமைக்கு இலக்கான போது பாடப்படும் பாடல் வானொலிப் பெட்டியில் ஒலிபரப்பப்படல்.)

ஒளி :-(மேடையில் காலை வேளையின் சூரிய ஒளி புலப்படுவதற்கான ஒளி காட்சிப்படுத்தப்படல்.)

அமைப்பு :- (மேடையின் மத்திய மத்திப் பகுதியில் ஒரு கதிரையும் வானொலிப் பெட்டியும் மேசையின் மேல் ஒரு விசிறியும் காணப்படல்.) (கீழ் மத்தி பகுதியில் நிறைய பாத்திரங்கள் சமையல் உபகரணங்கள் காணப்படல்.)

(மத்திய மத்திப் பகுதியில் காணப்படும் கதிரையில் சுப்பையா அமர்ந்து வெளியே ஜன்னல் ஒன்றைப் பார்த்தவாறு இருத்தல்.) (முள்ளையம்மா வீட்டில் இருந்து தேயிலைத் தோட்டத்திற்குச் செல்ல தயாராகி முரளியையும் பாடசாலைச் செல்ல தயார்படுத்துகின்றாள்.)

முள்ளையம்மா :- (அன்புடன்) என்னங்க... என்னங்க ஏதோ யோசனையா இருக்குறீங்க போல...(கூறியதும் சுப்பையா திடுக்கென்று திரும்பிப் பார்த்தார்)

சுப்பையா :- சொல்லுடி ஒன்னு இல்ல முரளி எங்க?

முள்ளையம்மா :- இங்க ஸ்கூலுக்கு போக தயார் ஆகிகிட்டு இருந்தா...
(முள்ளையம்மா பேசியவாறு முரளியை கூப்பிடுதல்.)

முள்ளையம்மா :- (கூக்குரலிடல்) முரளி... முரளி... முரளி... இங்க வா...
(முரளி வலது மத்தியில் இருந்து வருகைத்தரல்.)

முரளி :- (மகிழ்ச்சியுடன்) என்னம்மா? சொல்லுங்க... சொல்லுங்க.

முள்ளையம்மா :- (சிரித்தபடி) ஒன்னு இல்ல மவுனே... ஒன்னைய அப்பா கூப்பிட்டாரு. என்னா விஷயமுனு கேளு...

முரளி :- சரி... அம்மா நா... போய் கேக்குறே...
(முரளி சுப்பையாவை நோக்கி மத்திய மத்தி பகுதிக்கு வருகைத்தரல்.)

சுப்பையா :- என்னடா... கூப்பிட்டு எவளோ நேரமாகிப்போச்சி சீக்கிரமா வர வேணாமா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளி :- (பயந்தபடி) இல்ல அப்பா அது... வந்து...

சுப்பையா :- சரி சரி பயப்படாத நீ ஸ்கூலுக்கு போக காசு கேட்டியே இருக்குதாடா?

முரளி :- இல்லை அம்மா உங்ககிட்டதா கேட்டு வாங்கிப்போகச் சொன்னாங்க!

சுப்பையா :- (கோபத்துடன்) முள்ளையம்மா... முள்ளையம்மா...

முள்ளையம்மா :- என்னங்க! இதோ வந்துட்டே....

(சுப்பையாவை நோக்கி முள்ளையம்மா வருதல்)

சுப்பையா :- ஏன்டி ஒன்னைய நேற்று என்னா சொன்னேன்? தேயிலை மலையில யாருக்கிட்டயாவது கேட்டு காசு வாங்க சொன்னே யாண்டி வாங்கல?

முள்ளையம்மா :- அது வந்து யாருகிட்டயுமே காசு இல்லங்க...

சுப்பையா :- (மிரட்டியடி) எப்படியாச்சி முரளி ஸ்கூலுக்கு அனுப்பிரு எனக்குத் தெரியாது...

(சொன்னவுடன் முள்ளையம்மா முரளியை பார்த்தல்.)

முரளி :- பரவாயில்ல அம்மா... நான் இன்னக்கி ஸ்கூலுக்கு போகாட்டிப் பரவாயில்லை.

(கூறும் போது முள்ளையம்மா அமைதியாக இருத்தல்.)

(மேடையின் வலது மேல் பகுதியினூடாக முரளி வெளியேறுதல்.) ( திரை மூடப்பட்டு மெல்ல மெல்லத் திறக்கப்படல்)

**காட்சி 2**

களம் :- தேயிலைத் தோட்ட மலைப்பகுதி

கதை மாந்தர்கள் :- முள்ளையம்மா (பிரதான கதாபாத்திரம்)
மாணிக்கம் (கங்கானி)
லீலா (முள்ளையம்மாவுடன் வேலை செய்பவள்)
முரளி
சுசீலா (வேலை செய்பவள்)

ஒலி :- பறவைகள் கீச்சிடும் ஒலி , இயற்கையின் காற்று வீசும் ஒலி , புல்லாங்குழல் ஓசை

ஒளி :- வன்மையான பிரகாசமான ஒளி காட்சிபடுத்தப்படல். சூரியனின் கதிர்கள் மரங்கள் மீது பட்டுத் தெறிப்படையும் ஒளி

அமைப்பு :-(தேயிலைத் தோட்ட பகுதியும் , தேயிலை பறிக்கும் வேலையாட்களும் காணப்படல்.) (சுற்றி வர நிழல் தரும் மரங்கள் காட்சிப்படுத்தப்படல்) (அகன்று விரிந்த காடுகளும் தனித்தனியான மரங்களும் பக்கத்தில் நீரோடை ஒன்றும் காட்சிப்படுத்தப்படல்.) (நீரோடையின் நீரின் சப்தம் சல... சல... என ஓட தேயிலைத்தோட்டத்தில் கொழுந்து பறிப்பவர்கள் ஆங்காங்கே நின்று கொழுந்து பறித்தல்.) (காற்று பலமாக வீசும் போது மூங்கில் செடிகளில் பட்ட காற்று புல்லாங்குழல் ஓசையாக இனிமையாக கேட்டபடி மரங்கள் அனைத்தும் ஆனந்தத்தால் ஆடி மகிழ்கின்றன.)

முள்ளையம்மா:- அப்பா... ஒரே குளு குளுனு காற்று காட்டு சத்தம் இன்னக்கி மழையா! வெயிலானு தெரியலயே? படங்கு , சீட்டு இதையெல்லாமே வீட்டில் வைச்சிட்டு ஓடி வந்துட்டேனே!

லீலா :- முள்ளையம்மா... முள்ளையம்மா... என்னா சீக்கிரமா வந்துட்ட போல இன்னக்கி இருபது கிலோ போடாம போக மாட்ட போல?

சுசீலா :- அது தாண்டி என்னா சீக்கிரமா வந்துட்ட...

முள்ளையம்மா :- (சிரித்தபடி) ஆ...ஆ... என்னைய நீ சொன்னது போது நீ கொழுந்த எடுத்துட்டு வேலைய விட்டு வீட்டுக்கு போறத பாரு...

மாணிக்கம் :- (அதட்டியபடி) என்னா அங்க சத்தம் ஒழுங்கா கொழுந்த எடுங்க இருபது கிலோ இல்லாட்டி நெருக்க மாட்டே அம்புட்டுதா...

முள்ளையம்மா :- சரி... சரி... ஐயா எடுக்குறோம்...
(கூறியபடி வீதியைப் பார்க்கிறாள். முரளி வருகைத் தருகிறான்.)

முரளி :- அம்மா... அம்மா... இந்தாங்க படங்கு , சீட்டு எல்லாமே வீட்டுல் வைச்சிட்டு வந்துடீங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளையம்மா:- சரி... பரவாயில்லை உங்கள யாரு இங்க வர சொன்னாங்க?
முரளி :- (வெட்கப்பட்டு) இல்லை... அம்மா சும்மா வந்தேன்.
முரளி :- (தயங்கியபடி) அம்மா... அம்மா நான விளையாட போகணும்.
முள்ளையம்மா:- சரி... போ மவுனே.
முரளி :- அது... வந்து காசு வேணுமே அம்மா...
முள்ளையம்மா:- மவுனே எனக்கிட்ட இரவுக்கு சாப்பாட்டு சாமானமே வாங்க சுசீலா அக்காகிட்ட தான்டா காசு வாங்குனே எனக்கிட்ட காசு இல்லடா மவுனே.
முரளி :- (கவலையாக) சரி அம்மா நான் போகிறேன்...
(கூறியபடி முரளி இடது மேல் பகுதியினூடாக வெளியேறுதல்)
(திரை மூடப்பட்டு திறக்கப்படல்.)

**காட்சி 03**

களம் : கடை வீதி
கதை மாந்தர்கள் :பிரவீன்,(கடை முதலாளி)
முள்ளையம்மா
முரளி

ஒலி : (ஒரு மழை பெய்யப் போகின்ற இருண்ட சப்தமான ஒலி காட்சிப்படுத்தப்படல்)
(வானொலி ஒலி இடி மின்னல் ஓசைகள் காட்சிப்படுத்தப்படல்)
(கிட்டார் ஒளி பயன்படுத்தப்படல்)
ஒளி : (பறவைகளின் மீது பட்டுத் தெரிப்படைகின்ற கருமை நிற ஒளி மேடையில் மென்நிறமான ஒளி காணப்படல்)
அமைப்பு : (மேடையில் வலது கீழ்பகுதியில் ஒரு வீட்டின் அருகில் ஒரு கடை காணப்படல் கடையின் முன் பகுதியில் வானொலி காணப்படல் கடை அருகில் நிறைய மானிடர்கள் காணப்படல்.)

(மேடையில் வலது கீழ் பகுதியில் கடை ஒன்றில் முதலாளி காணப்படுகின்றார் கடையின் உள்ளே "மாலை பொழுதின் மயக்கத்திலே நான் கனவு கண்டேன் தோழி" என பழைய பாடல் இசைக்க முதலாளி கணக்கு வழக்குகளை பார்த்துக் கொண்டிருக்கிறார் அத்தோடு கடையின் உள்ளே நிறைய மனிதர்கள் பொருட்களை வாங்கும் காட்சி ஒளிபரப்பாக்கப்படல்)

பிரவீன் : என்னடா இது கணக்குல பாதி குறைந்து போன மாதிரி இருக்குதே
(தனக்குள்ளே அவர் பேசும் போது முல்லையம்மா மேல் மத்தியினூடாக வருகை தரல்)
முல்லை அம்மா : ஐயா பிரவீன்.... ஐயா ....
(பிரவீன் முல்லியம்மாவை பார்த்தான்)
பிரவீன் :- சொல்லுங்க....என்னா வேணு.......
முள்ளையம்மா:- (தயங்கிய படி) எனக்கு கடனுக்கு கொஞ்சம் பொருட்களை தாரிங்களா?
பிரவீன் :- முன்னாடி வாங்கின கடனையெல்லாம் தாங்க தாரேன்....
முள்ளையம்மா:- (கெஞ்சியபடி) இல்ல ஐயா இந்த மாத சம்பளம் கிடைச்சதும் தங்துடுரே ஐயா..... மன்னிச்சி கொஞ்சம் தாங்க ஐயா.......
பிரவீன் :- இயலாது...... ஏலாது காசு தாங்க தாரேன் வேறு கதையே வேணாம்....
முள்ளையம்மா:- ஐயா...... காலையில் இருந்து பட்டனணியா கெடக்குறோம் ஐயா நான் பட்டனியா கெடந்தாலுமமே பரவாயில்ல என் மகன் முரளியுமே பட்டனியா கெடக்குறா தயவு பண்ணுங்க ஐயா.....
பிரவீன் :- ஏலாது.... ஏலாது நீ பல தடைவ கேட்டாளுமே ஏலாது. (கூறும் போது முரளி மயக்கமடைந்து விழுந்தான்)
(திரை முற்றாக மூடப்பட்டு திறக்கும் பொது வெருமையாக கறுப்பு நிறமாக மேடை காட்சித் தரல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி 04

களம் :- வைத்தியசாலை (நுவரெலியா)

கதை மாந்தர்கள் :- சுப்பையா
முள்ளையம்மா (முள்ளையம்மாவின் தோழி) சுசீலத, லீலா
முரளி
வைத்தியர்

ஒலி :- (அவசர சிகிச்சை வண்டியின் இரைச்சல்) (வைத்தியசாலை வைத்தியர்களின் சப்தங்கள்)
(அழுகைக் குரல்)

ஒளி :- (மென்னிற ஒளி

லீலா :- நீங்களாவது கேட்டு இருக்க கூடாதா..... சுப்பையா
(சுப்பையா முகத்தைப் பார்த்தல்)

சுப்பையா :- இல்லை.... முள்ளையம்மா கேக்குறேனு சொன்னா..... அதுதா நானு கேக்கவில்லை.

வைத்தியர் :- என்னை மன்னித்து விடுங்கள்..... உங்கள் பிள்ளை இரண்டு நாட்களாக எதுவுமே சாப்பிடவில்லை.....

முள்ளையம்மா:- ஐயோ..... என்னுடைய மவுனுக்கு என்ன ஆகிருச்சி....... சொல்லுங்க..... சொல்லுங்க........

வைத்தியர் :- அது.......... அவர் இறந்து போய்விட்டார்.

முள்ளையம்மா:- ஐயோ........ இல்லை ...... இல்லை என்னுடைய மகன் என்னை விட்டு போக மாட்டான் எனக்கு என்னுடைய மகன் வேண்டும். (அழுதபடி)

லீலா :- பாருங்க...... வெக்கப்பட்டு கேக்காம விட்டாங்க அதுனால தான் அவருடைய பிள்ளையும் இறந்து போயிருச்சி.

சுசீலா :- ஆமா....டீ சரியான வறுமைதா அதுதா முரளி இறந்துபோயிட்டான்.

(சுசீலாவும் லீலாவும் முள்ளையம்மவுக்கு ஆறுதல் கூறி வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.)
(சுப்பையாவும் கவலையால் அழுதபடி தன் மகனிடம் நின்றார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை பிரிவு – 5 சிறுகதை
G.மணிமேனகா
மமா/வ/ அருணோதயா இந்து கல்லூரி
கந்தப்பளை

## ஏக்கம்

இருள் போர்வையை சந்திரன் போர்த்தியிருந்தான் போர்வையை அலங்கரிக்கும் வண்ணம் நட்சத்திரங்கள் காணப்பட்டன. நிலவொளியில் அக்கிராமம் குளித்த கொண்டிருந்தது. ஆறு லயன்களும், அவற்றிற்கு அருகாமையில் ஓர் தனி வீடுமாக காணப்பட்டன. மேட்டு லயத்தில் சில தெருநாய்கள் ஓடுவதும் பின்னர் குரைப்பதும், படுப்பதுமாய் இருந்தன. பனிய லயத்து முச்சந்தியில் மின்மினிப்பூச்சிகள் மின்னி கொண்டிருந்தன. அனைவரையும் உறங்க வைக்கும் இரவு அவளை உறங்க விடவில்லை.

ஏதோ எண்ணத்தில் புரண்டு புரண்டு படுத்துகொண்டிருந்தாள். அவள் அருகே அவளது பிள்ளை ராஜா உறக்கத்தில் இருந்தான். இளம் வயது இருக்கலாம். நெற்றியில் திருநீறு பூசப்பட்டிருந்தது காதில் கறுவேப்பிலை குச்சி, ஓட்டை விழுந்த ரவிக்கை எப்பொழுது வேண்டுமானாலும் கிழிந்துவிடலாம் என்ற ஓர் சேலை அவளின் அருகே எச்சுப்படிக்கம் இருந்தது. வறுமையை பறை சாற்றி கொண்டிருந்தன. சாணத்தால் மெழுகிய தரை, களிமண் பூசப்பட்ட சுவர் சுவரில் பல ஓட்டைகள் கதவருகே படங்கும் கயிறும் கிடந்தன. பிள்ளையை சாரி முந்தானையில் போர்த்திவிட்டு தூங்க முயற்சி செய்கிறாள் கற்பகம். அவளால் அது முடியவில்லை தன் பிள்ளையின் எதிர்காலத்தை பற்றியே சிந்திக்கிறாள் சிந்தித்தவள் கண்ணயர்ந்து விட்டாள். “அம்மா… அம்மா…. தேத்தண்ணி….” என்று ராஜா தட்ட கண்விழித்தாள்.

சூரியன் சந்திரனின் போர்வையை தகனம் செய்ய, புது போர்வை தயாரிக்க சந்திரன் விரைந்தான். தகனம் செய்ததால் அடி வானம் சிவந்திருந்தது இரவு முழுதும் கண் விழித்து காத்திருந்த பணியானது, புல்லின் கீழே உறங்க சென்றது. மெதுவாக கொண்டையை போட்டு கொண்டு எழுந்தாள் கர்ப்பகம். சூரியன் உதிக்க மறந்தாளும், தன் கணவனை வணங்க மறக்க மாட்டாள் அவள்.

கணவனை வணங்கிய அவள் குசினி பக்கம் விரைந்தாள். முட்டியில் இருந்த தண்ணீரை வாசலில் ஊற்றி விட்டு, கரிக்கொட்டை துண்டை எடுத்தவள் குடத்தோடு பீலியை நோக்கி சென்றாள். ஓரிரண்டு வாசல்கள் கழுவப்பட்டிருந்தன. கதவை திறந்த செல்லாயி. “அடியே… தரித்திரியமே… விடிய காலையிலேயே இப்புடி நிக்கிரியே, ஓ மூஞ்சில முளிச்சா இன்னக்கி காரியம் வெலங்குமா?....” என்று வெடுக்கென்று உள்ளே சென்று விட்டாள். இது அவளை பாதித்தாலும் செவியில் வாங்காதது போல சென்றுவிட்டாள்.

“நல்ல அதிசயமடி… அவரு இருக்கப்போ, கற்பகம் நீ முன்னால வந்தனா எல்லாமே நல்லபடியா நடக்குதுனு சொன்ன செல்லாயி இப்ப இப்புடி நாடகம் போடுறாளே.. ச்சீ மனசுத்தா எல்லாத்துக்கும் காரணம். என்னத்த சொல்லி புரிய போவுது நம்ப சன புத்தி அப்புடி..” என்று முணுமுணுத்தவாறு பீலியை அடைந்தாள். தண்ணீர் மெதுவாக வந்து கொண்டிருந்தது குடத்தை வைத்தவள் கரிக்கொட்டையால் பல்லை விளக்கினாள்.

அவள் வருகைக்கே காத்திருந்தவள் போல பனிய லயத்து வள்ளியம்மா வந்தாள். “கற்பகம் இரண்டு மாசமா சீட்டு குடுக்கல, நா மத்தவளுங்ககிட்ட என்னத்த சொல்ல? புருசேன் இல்லாதவளே, ஏதாச்சும் செஞ்சி குடுத்துருவானு பாத்தா குடுக்கிற இல்ல.. கை கூசாம வாங்குன தானே? அந்த மாதிரி குடுக்கணு” என்றவள் வாயில் உள்ள எச்சிலை துப்பினாள். குடம் அரைவாசி நிறைந்து கொண்டிருந்தது கற்பகம் மௌனமாகவே நின்று கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அது மட்டும் இல்லடி, என் கிட்ட ஆயிரம் ரூவா வட்டிக்கு வாங்குன ஞாபகம் இருக்கா? புள்ளய ஸ்கூல் சேக்கனுனு கேக்கயு குடுத்தே அதுக்கு வட்டியும் வருதுல்ல, காசு தாரமாதிரி இல்லையே! எப்ப தர போர? என் புருசேன் கேட்டா நா என்னத்த சொல்ல...? என்று வெற்றிலை கொக்கணியை எடுத்தாள். எச்சிலை துப்பிய கற்பகம் “இன்னு ரெண்டு நாள் தானேம்மா இருக்கு சம்பளத்துக்கு.. அந்த மதுரை வீரன் ஐயா மேல சத்தியமா நா காச தாரேம்மா... என்று பணிவாக கூறினாள்.

“ம்.... நீ சொன்ன வாக்க மீறமாட்டனு தெரியும் அதுநாள நா ஒன்ன விட்டுட்டு போரே என்று குறுக்கில் இறங்கிய வள்ளியம்மா மறுபடி ஓடி வந்தாள். “காசு விசயத்துல சொல்ல வந்தத மறந்துட்டே பாத்தியா? நாளைக்கி காலையில என் மகனும் அவ சம்சாரமும் வாராங்க இப்புடி காலையில ஏதும் அவுங்க மொகத்துல முளிச்சிறாத.. பாவம் அதுக நல்லா வாழனு தாளி அறுத்துட்டு நிக்கிற மூளி ஓ முஞ்சில முளிச்சா அவளோத்தா என்று காரசாரமாக பேசிவிட்டு நடையை தொடர்ந்தாள்

இவள் கடைசியாக பேசிய வார்த்தை அவள் வயிற்றில் தீயை மூட்டியது போல இருந்தது. “இவளும் பொம்பள தானே, ஓர் பொன்னு மனசு இன்னொரு பொன்னுக்கு தெரியும்னு சொல்வாங்க ஆனா இவங்களுக்கெல்லாம் இப்புடி இல்ல போல, என் நிலமை அவளுக்கு இருந்து நா அவ மாதிரி பேசி இருந்தா அவ மனசு எப்புடி கொதிக்கும்? யோசிக்கிறா இல்லையே...” என்று ஆதங்க பட்டவள் முகத்தை கழுவிவிட்டு குடத்தை இடுப்பில் வைத்தவாறு வீடு திரும்பினாள்.

அனைவரும் வாசல் கழுவி இருந்தனர். காலைப்பனி மறைய சூரிய ஒளியில் லயம் பிரகாசித்து கொண்டிருந்தது. பக்கத்து வீட்டு கிழவி வெற்றிலை இடிக்கும் சத்தமும், அவள் மருமகள் தேங்காய் துருவும் சத்தமும் கேட்டன. குடத்தை சுவரோரம் சரித்து வைத்தாள். அவள் சாரியில் இருந்து நீர் சொட்டி கொண்டிருந்தது.

கொடியில் கிடந்த துண்டில் முகத்தை துடைத்த அவள் மிளாறுடன் குசினிக்குள் சென்றாள். அடுப்பில் இரவு எரித்த மிளாறின் சாம்பல் குவிந்திருந்தது அதை அள்ளி விட்டு மிளாறை உடைத்து அடுப்பினுள் வைத்தாள். அவள் மனம் போல மிளாறும் காய்ந்து கொண்டிருந்தது. லாம்பில் உள்ள மண்ணெண்ணெயை அடுப்பில் ஊற்றி அடுப்பு பக்கென்று எரிய தொடங்கியது. முட்டியில் நீரை ஊற்றி அடுப்பில் வைத்தவள். பெரல் நீரில் பாத்திரங்களை கழுவி அடுக்கினாள். தண்ணீர் சுட்டு விட தேநீர் தயாரித்து தானும் குடித்து ராஜாவிற்கு தேநீரை ஊற்றினாள். “ராஜா ராஜா எழும்புடா தங்கம்... தேத்தண்ணிய குடிச்சிட்டு ரெடி ஆகுங்க.. என்று எழுப்பினாள். அவன் எழும்பாமல் முணங்கி கொண்டிருக்க, “என்ன ராஜா... எழும்புடா... என்று தட்டினாள். எழும்பிய ராஜா தேநீர் பருக தொடங்கினான். “அம்மா... என் கிட்ட வாவே... என்று ராஜா செல்லமாக அழைத்தான்.

“என்னா, சொல்லு ராஜா... என்று அருகே அவள் செல்ல, அன்பு ததும்ப முத்தமொன்றை கொடுத்தான். அவனது முத்தத்தை பெற்று கொண்ட கற்பகம் ராஜாவின் தலையை வருடி முத்தமிட்டாள். யார் என்ன கூறி காயப்படுத்தினாலும் அதற்கு மருந்து தன் பிள்ளை ராஜாதான் என எண்ணி கொள்வாள். அவளுடைய வாழ்வே ராஜாதான். அதனால்தான் மறுமணத்தை நிராகரித்தாள். தேநீரை ராஜா பருகிவிட்டு எழும்பினான். பாயை சுருட்டி மூலையில் வைத்த கற்பகம் சவுக்குகட்டில் வீடு கூட்டிவிட்டு கணவனுக்கும் மதுரை வீரனுக்கும் விளக்கேற்றி வணங்கினாள்.

பின்னர் சமயலறையில் வேலையை தொடங்கினாள். முகம் கழுவிய ராஜா பள்ளிக்கு தயாராகினான். ரொட்டிக்கு மா பிசைந்தவள், “உப்பு, புளி, மிளகாயுடன்....” சம்பலை அரைக்க தொடங்கினாள். அரைக்கும் சத்தம் கேட்டு ஓடி வந்த ராஜா “என்னா அம்மா, இன்னைக்கும் ரொட்டியா? என்ன எல்லாரு ரொட்டி ராஜானு” பட்டபேர் வச்சி கூப்புடுறாங்க, அம்மா எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொட்டி எல்லா கொண்டு போக ஏலாது, பிட்டு, இடியப்பம், பொங்கல் இந்த மாதிரி சாப்பாடுத்தா வேணு" என்று அடம்பிடித்தான். ராஜா சின்னபிள்ளை அல்லவா?

அரைத்து முடித்தவள் கையை கழுவிவிட்டு சேலையில் கைத்துடைத்தவாறு, ராஜா, என் செல்லம் தானே, இன்னும் ரெண்டு நாள் தானே இருக்கு சம்பளத்துக்கு, சம்பளம் போட்ட உடன நல்ல சாப்பாடா செஞ்சி தாரே ராஜா... இரண்டு நாளைக்கி மட்டும் இத கொண்டு போடா... யாருக்கு தெரியாம சாப்பிடு... என் ராசா தானே... என்று கவலை தோய்ந்த முகத்தோடு செல்லமாக கெஞ்சினாள்.

அவனுக்கு தாயின் கெஞ்சல் ஏதோ பன்ன "பரவாலம்மா... நா தெரியாம சாப்புடுறே, கவலை படாதீங்க என் நல்ல அம்மா தானே.. சிரிங்க... என்றான். மகனின் வார்த்தை வயிற்றில் பாலை வார்த்தது போல இருந்தது அவனை கட்டியணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

ரொட்டி தயாரித்த அவள் தனக்கும், பிள்ளைக்கும் கட்டி கொண்டாள். மகனுக்கு ரொட்டியை பேக்கில் வைத்துவிட்டு தனக்கு ரொட்டியை கூடையில் போட்டு கொண்டாள். பின்னர் இடுப்பில் படங்கை இறுக்கமாக கட்டியவள் கூடையை தலையில் மாட்டி கொண்டு நடக்க தொடங்கினாள். "நான் வாரேம்மா என்று கூறிக்கொண்டு ராஜா குறுக்கில் இறங்கினான். "கவனம் சாமி என்றவள் விரைவாக நடக்க தொடங்கினாள்.

அவளது நடைக் கேற்றவாறு கூடையும் ஆடிக்கொண்டிருந்தது. காட்டு பங்களா நிரை என்று கங்காணி கூறியதை நினைவுப்படுத்தியவளாய் நடந்தாள். சூரியனது கதிர் பட்டு இளந்தளிர்கள் மேலும் அழகாக தெரிந்தன. பெண்கள் கூடையோடு சென்று கொண்டிருந்தனர். எறும்பு ஊர்வது போல அவர்களது நடை தெரிந்தது.

இயற்கைக்கும் பெண்களை சீண்டுவதில் அலாதிய பிரியம் போலும் மெதுவாக வீசிய தென்றல் சற்று பலமாக வீச தாவணி விலகி கொண்டிருந்தது. காட்டு பங்களாவை அடைந்த கற்பகம் சற்று நின்று சவுக்குமுனியை வணங்கினாள். "அப்பா சாமி நாங்க வயிறு பொலைக்க வந்துருக்களோம். பூச்சி, பட்ட தீண்டாம கவனமா பார்த்துக்கயா.. என்று வேண்டி சென்றாள்.

தன் கணவனை புதைத்த இடத்தில் நட்ட தேயிலைசெடி நன்றாக வளர்ந்திருந்தது. மெதுவாக பிய்த்து பொலி பொலி என கூடையில் போட்டுகொண்டாள். "ம்.... மனுசே இருக்கப்பயு தேயிலை, கவ்வாத்துனு கெடந்துச்சி செத்து இன்னக்கி ஒரு செடிய வளர்த்து வாழ வச்சிருச்சி... ஏதும் செய்யாத தொர பயலுங்களுக்கு, கங்காணி நாய்களுக்கு புதைக்க இடம் கொடுக்குறாங்க.. மண்ணுக்காக உசுர உடுறவனுக்கு ஒன்று இல்லையே என்று எண்ணியவள் கணவனின் புதைக்குழியை தொட்டு கும்பிட்டு கொண்டாள். பின்னர் புதைக்குழி மண்ணெடுத்து நெற்றியில் பூசிக்கொண்டாள்.

"ஏப்புள்ள கற்பகம் அந்த நெரைக்கி போ.... என்று கங்காணி கூறினான். கொழுந்தெடுத்த அவளுக்கு, காலையில் நடந்த சம்பவம் நினைவிற்கு வந்தது. சம்பளம் எவளோ இருக்குனு தெரியல வள்ளியம்மாவுக்கு காசு குடுக்கனும், ஈடு வச்ச தோட திருப்பனும், புள்ளக்கி நல்ல சாப்பாடு குடுக்கனும், சீட்டு போடனும்... ம்ம்ம் காசு இருந்தா எதையும் செய்யலாம். புருசன் இல்லாம காசு இருந்தா எனக்கும் மரியாதை கெடைக்கும்... யாரு என்னய தரித்தியம்னு சொல்லமாட்டாங்க" என்று எண்ணி பெருமூச்சு விட்டாள்.

ம்ம்ம்... என் ராஜா நல்லா படிச்சி நல்ல உத்தியோகத்துக்கு பொய்ருவான் அப்புறம் என் கைலயும் காசு இருக்கும். நாயி மாதிரி நானும் பேச்சு வாங்க தேவை இல்ல. கூடைய தூக்கிகிட்டு கஷ்டப்பட தேவை இல்ல. நேரத்துக்கு நல்லா சமைச்சி போட்டு புள்ளய பாத்துகுவே" என்று மகிழ்ச்சியாக மனக்கோட்டையை கட்டி கொண்டு கொழுந்து பறித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான். பின்னர் இடுப்பில் சொருகியிருந்த பழைய உறையினுள் வெற்றிலையை எடுத்து போட்டு கொண்டாள்.

அவள் கால் தேயிலை கட்டையில் பட, ஆ.. என்றவள் காலை பார்த்தாள். சிறிய உராய்வு, ம்.. எப்ப என் புள்ள படிச்சு பெரிய உத்தியோகம் பாப்பானோ என் கஷ்டமான வாழ்க்கைக்கு விடிவு கெடைக்குமோ? என்னயவு எப்ப மதிப்பாங்களோ? என்ன கடன் காரி சீதேவி இல்லாதவனு பேசுன வாயெல்லாம் மூடுபடுமோ? என்ற ஏக்கத்துடன் கொழுந்து பறித்தாள். கூடை நிரம்பி கொண்டிருந்தது. மெல்லிய தென்றல் வருடி சென்றது. சங்கு ஊதும் சத்தம் கேட்க. “எல்லா நெருவைக்கு போங்க” என்று கங்காணி கத்த மெதுவாக இறங்குகிறாள் கற்பகம் தன் விடிவை எண்ணியவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.பவிக்ஷனா
தரம் 11
மமா/வ/இராகலை உயர் பாடசாலை

## அடுத்த அக்னி பிரவேசம்

பெண் இன்றி உண்டோ உலகு?
பிறப்பை தரக்கூடிய அதிசயமோ நீ!
உதிரத்தை பாலாக்கி உணவூட்டும் வள்ளலோ!
அன்பு மழையால் நனைய வைக்கும் அற்புதமோ......

பாதி வாழ்வை பல வழியில் அர்ப்பணித்தவளே!
பல ஆசைகள் உனக்குள்ளும் உண்டா?
ஏக்கங்களை மனதிலே சுமந்தது போதும்
எழுந்திடுவோம் அக்கினியாய்.........

எத்தனை நாளுக்கு கணவன் கைக்குள் கிடப்பாய்?
உன் அவாக்களை மறைக்கும் காலம் முடியட்டும்........
எத்தனை நாட்களுக்கு தாயாய் தேய்வாய்?
உரத்து கேட்கும் காலம் பிறந்ததடி.........

ஆணுக்கு சேவைசெய்த காலம் ஒழியட்டும்
ஆசைகளை மனதில் புதைத்த காலம் மறையட்டும்
விரல் நுணிகள் இனியுமா தேய வேண்டும்
அடுத்த அக்னி பிரவேசத்திற்கு தயாராகுவோம்.........

சரித்திரத்தையே மாற்றும் சக்தி உன் கையில்,
சிறகுகள் வேண்டி ஏன் நிற்கிறாய்?
மூடர்களோடு கழித்த காலம் ஒழியட்டும்
பறந்திடுவோமே விண்ணை தாண்டி.........

கணவன் பிரிந்து சென்று விட்டானோ?
கைம்மை நோன்பு நோட்கப் புறப்பட்டாயா..........
உன் வாழ்வை மாற்றும் சக்தி நீதானடி!
சிறகுகளை விரித்திடுவோம் வெளியே வா.........

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் இருந்தது போதும்!
பாரதி இருந்தால் வியக்கும் சிங்கப் பெண்ணாய் மாறிடுவோம்
விண்ணுக்குள் உலா வர ஏங்குகிறாயா?
குடும்ப சிறையிலிருந்து பறந்து வா...........

மகாகவி செய்த அக்னி பிரவேசம் போதும்
தனியாக தயாராவோம் அடுத்த அக்னி பிரவேசத்திற்கு,
கண்ணீர் துளிகள் நிலத்தை கழுவியதும் போதும்
கர்வமாய் எழ வேண்டிய நேரமிது.......

பறக்கும் பட்சிக்குள்ள சுதந்திரம் உனக்கில்லை யோ?
பறவை கூட உரிமைக்கு போராடுமோ... என்னவோ.....
எப்போதும் மாற்றத்திற்கு தயாராகுவாய்
உனக்கான நேரம் அழைக்கிறது - எழுந்து வா.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாக நடமாட பயந்தது போதும்!
அரக்கனின் கை தீண்டிடுமோ என அஞ்சியதும் போதும்!
அரக்கனையே உன் புனிதத்தால் வென்றிடலாம்......
திமிருடன் மிளிர்ந்திடலாம் - விரைந்து வா.

தனியாக வாழ்கிறாய் என தூற்றப்பட்டு விட்டாய்,
உன்னால் முடியாதென்று அவமதிக்கப்பட்டாய்
மடமையாய் நின்ற காலம் மறையட்டுமடி......
தனிமையிலே தைரியமாக வாழ்வேன் என்று கூறிடலாம் - விழித்திரு,

கொடுரனிடம் கற்பை இழந்தாயே
அவன் தீண்டலில் எத்தனை வலிகள் பெற்றாயடி,
கண்ணீரால் ஊரை நனைந்தது போதும்!
வெட்கித்து தலை குனிய வேண்டியது நீ - அல்ல......
தீண்டிய கரங்கள் உனை வேண்டுமடி
கண்ணீர் கம்பளைகளை கொழுத்தியெறி.....
கர்வமாய் வெளியே வா

கண்ணீர் சிந்திய காலங்கள் போதும்!
கற்பை எண்ணி கலங்கிய காலமும் போதும்.....
சமூகத்திற்குள் தீப்பொறியாய் மாறிடு
கொடுரர்களை அழித்திடுவோம் - எழுந்து வா....

ஒரு நிமிடம் கூட சிந்திக்காமல் உன்னை சிதைத்தானே......
ஐயோ பாவம் என்று கூட எண்ணவில்லையே
உன் கண்ணீரை கண்டும் அவன் மனம் கலங்கவில்லையோ!
அழுதது போதும் ஆக்ரோஷமாய் வெளியே சீறிடு.....

பெண்ணை அவமதித்த காலங்களை மண்ணிலே புதைத்திடலாமா?
பெண்ணை மதிக்கும் சமூகத்தை மண்ணில் விதைத்திடலாமா?
அடுத்த அக்னி பிரவேசம் ஆரம்பமானது.....
சிறைவாசம் பூண்டது போதும் - தீப்பொறியாய் எழுந்திடு......

கற்பிற்கு சிறந்த கண்ணகியும் ஒரு பெண்ணே.....
உன்னால் மலையையும் நகர்த்த முடியும்
திரௌபதிக்கு ஸ்ரீ கிருஸ்னர் உதவியிருக்கட்டும்!
உனக்கு நீயே துணை, நீயே தைரியம் - ஜொலித்திடலாம் வா

உன்னால் மட்டுமே பிரசவிக்க முடியும்
உனக்கு மட்டுமே அத்தனை வலிகளை தாங்கவும் இயலும்
சிந்திக்க வேண்டிய காலம் வந்து விட்டதடி......
சிறு வலிகளை தூரப்போட்டிடலாம்

அக்கினி பறவைகளாய் சிறகு விரிப்போம்......
ஆகாயத்தை தைரியமாய் எட்டிடுவோம்
விண்வெளியையும் தொட்டிடலாம்
தீப்பொறியாய் மாறிடுவோம் - அக்னியாய் வலம் வருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை பிரிவு – 4 சிறுகதை
P.விதுர்ஷன்
மமா/வ/ அருணோதயா இந்து கல்லூரி
கந்தப்பளை

## தைரியம்

சந்திரனோடு உறவாடியச் செங்கதிரச் செல்வன் பிரபஞ்ச சஞ்சாரத்திற்க ஆயத்தமானான். இரவின் போர்வையாக புல்லில் பூத்திருந்த பனித்துளிகளை செங்கதிரவன் தென்றலோடு வருட பறவைகளின் ஓசை கமும மெல்லப் புலர்ந்தது காலை. ஓவியனொருவன் வண்ணக் கலவைகளை எடுத்துச் செல்லும் போது கால் தடுமாறி வீழ்ந்ததில் வண்ணக் கலவை சிதறியதைப் போல வண்ண வண்ணமாய் காட்சியளித்தது அந்த காலை வானம்.

எனது பக்கத்து வீட்டு ராமாயி பாட்டிக்கு தினமும் வல்லாரைக் கீரைகளை ஆய்ந்து சந்தைக்குக் கொண்டுப் போய் விற்பதே அவளது தொழில். எங்கள் லயம் என்றால் அதில் பத்து காம்புராக்கள், ஐந்து குடும்பங்கள் என்பது எங்களது ஜீவியம் அவள் வெற்றிலை இடிக்கும் சத்தமே எங்களது ஜீவநாதம் "டொக்... டொக்..."

பஞ்சுப்போல் முடி, சுருங்கிய குழிவிழுந்த கன்னங்கள், ஐம்பது சதம் மாதிரி நெற்றியில் ஒரு பொட்டு, கிழிந்த காதுகளிரண்டிலும் தொங்கட்டாங்கள், அது இரண்டுமே அவளது நடைக் கேற்ற தாளம் சேர்க்கும்.

பாட்டிக்கு உறவுகள் என்று யாருமில்லை, பாவம் அவள் திருமணமும் முடிக்கவில்லை நான் எனக்கு எப்பொழுதாவது தோன்றினாள் அவருடன் படுத்துக் கொள்வேன்.

கண்ணா!
கண்ணா.... எழும்புடா இவளோ நேரமாவா தூங்குவ எழும்பு சுக்குலுக்கு போகனு என்றுக் கூறிவிட்டு பீலிக்கரையை அடைந்தாள். ஒரு கையில் சிமிலி லாம்பு, மறுக் கையில் வெங்கலக் குடத்துடன் விரைந்தாள். அங்கு காளையன் தேலக் கரியுடன் நின்றுக் கொண்டிருந்தான்.

காளையே...! வெல்லனா எழும்பிட்ட போல, சரி வா..! தண்ணிய புடிச்சிக்கிட்டு போகனுண்டா கொஞ்சோ தள்ளி நில்லு, மலக்கி போய் கீரையு கொஞ்சோ ஆயனும் கண்ணாவ சுலுக்கு அனுப்பனு "சரி ஆச்சி நீங்க தண்ணிய புடிச்சிக்கிட்டு போங்க, நா...! அப்பரோ மூஞ்ச கழுவிட்டு வாரே" என்று காளையன் கூறியது பாட்டிக்கு மனமகிழ்வை தந்தது.

காலச் சக்கரம் சற்று நகர்ந்தது. மிளாரு குச்சிகளை அடுப்பில் வைத்து தணல் ஏற்ற முட்பட்டாள். மார்கழி மாதம் என்பதால் குளிர் தாண்டவமாடியது தணல் பிடிக்கவில்லை அதனால் லந்தரில் உள்ள லாமன்ணெய்யை ஊற்றி நெருப்பை கிழித்து வீசினாள்.

பக்....! பக்...! என்று நெருப்பிடித்துக் கொண்டது. கொஞ்சம் தண்ணீரை சுட வைத்தாள் நானும், பாட்டியும் சாயத்தண்ணீ குடிச்சோ பிறகு பேருந்தில் ஏறி பள்ளியை அடைந்தேன்.

வழமையாகவே பாட்டி காலை உணவை எடுத்துக் கொள்வதில்லை. மலைக்குச் சென்று விடுவாள். அங்கு காணப்படும் குப்பைக்குழிகளில் வளரும் கீரைகளை பிடிங்கிக் கொண்டு சந்தைகளில் விற்பது வழக்கம்.

அவள் ஒற்றையடிப் பாதையில் செல்லும் போது அவளின் கால்களும், அணிந்திருந்த லவிக்கையும் அவளின் வறுமையை பரைச்சாற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் வழியே ஒரு குப்பைக் குழி அங்கு வளரும் வல்லாரைக் கீரைகளுக்கு "கிராக்கி" அதிகம். ஆனால் அங்கு கட்டாக்காலி நாய்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாய் திரிந்த வண்ணம் இருக்கும். காக்கை கூட்டம் அங்கயே குழுமியிருக்கும் "எதாவது உணவு கிடைக்குமா? என்று அங்குள்ள நாய்களுக்கும், காக்கைகளுக்கும் ஒரு உரிமைப் போராட்டம் நடைபெறும் அங்கு....

காலச் சக்கரம் நத்தை போல நகர்ந்தது கீரைகளை ஆய்ந்துக் கொண்டு காம்புராவை நோக்கி விரைந்தாள். சந்திரன் வானில் நர்த்தனம் செய்துக் கொண்டிருந்தான். பாட்டி என் வீட்டிற்கு வந்தாள். என்ன விசேசமென்றால் ஒட்டு மொத்த லயத்திலும் எங்களது வீட்டில் மட்டுமே "டீ .வீ" இருக்கு. அதப் பாக்க வருவா...

அடேய் கண்ணா...! கதய போட்டு வுடுரா... டீவியை சிதம்பரச் சக்கரத்தை பேய் பார்ப்பது போல பார்ப்பாள்.

ஏய் கெழவி வாய மூடு... கொசு வாய்வுள்ளுக்கு போனாலும் தெரியாது. என்று அப்பா நகைச்சுவை செய்வார். பாட்டிக்கு தனது பொக்க வாயை திறந்துக் கொண்டு டீ.வீ பார்ப்பதே வழக்கம். அதனால் தான் அப்பா அப்படிக் கூறினார். அன்று நேரம் கழிந்தது இரவு உணவை உண்டு வீட்டிலேப் படுத்துக் கொண்டாள்.

கதிரவன் அரைத் தூக்கத்தில் கண்ணை சிமிட்டிக் கொண்டிருந்தான். வழமைப் போல மலைக்கு சீக்கிரம் விரைந்தாள். வல்லாரைகளை ஆயும் போது திடீரென்று ஒரு சத்தம்.

ம்ம்...! ம்ம்...! பக்கென்று பயந்து சத்தம் வந்த இடத்தை நோக்கி விரைந்தாள். நீத்துப் பூசணிப் போல ஒரு சிறுமியின் அழுகை சத்தம் அது

வாமா... யாருமா... நீ... என்று பல கேள்விகளை வினவினாள். பாவம் அந்த சிறுமி அவள் ஒரு ஊமை. குழந்தை வாசமே படாத அவளுக்கு அந்த சிறுமி ஒரு புதுவிதமான அனுபவத்தை தந்தது.

தைரிய நெஞ்சம் கொண்டு அவளை வளர்க்க எண்ணினாள். சீலையில் சுத்திக் கொண்டு வீட்டை விரைந்தாள். அன்று என்னமோ தெரியவில்லை வெற்றிலை இடிக்கும் சத்தமும் வரவில்லை. பாட்டிக்கு ஏதோ நிகழ்ந்து விட்டதோ என்று எண்ணியபடி அவள் வீட்டை விரைந்தேன்.

பார்த்தவுடன் பக்கென்று தோன்றிற்று. " சத்தம் போடதப்பே நா எல்லாதயு சொல்லுரே.." என்று நடந்தவற்றை ஒப்புவித்தாள் யாருமில்லாத அநாதக்கி தொனயா வந்தியாமா? என்று கூறிக் கொண்டு வீட்டை விரைந்தேன். அவளுக்கு அந்த சிறுமியை மேலதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற எண்ணமும் வரவில்லை. இருவரும் கண்ணயர்ந்தனர்.

டமார்...! டமார்...! என்று சத்தம் பயந்து போய் இருவரும் விழித்தனர். முதலைக் கண்ணீருடன் ஒரு பெண்ணும் பொலிசும்; ஏய்... ! ஆச்சி ஒங்க வீட்டுல ஒரு சின்ன புள்ளவொனு இருக்காமே" இல்ல சேர்....! என்றாள்.

பிறகு பிள்ளை அம்மாவை பார்த்ததும் கட்டியணைத்தாள். பிள்ளையை பிரிய முடியாதவளின் கண்களில் நீர் பூவை சிதறியது.
இதை கேள்விப்பட்ட ஊர் மக்கள் வெறு வாய்க்கு அவள் கிடைத்ததைப் போல திரிந்தனர்.

ச்சீ சனியன் தொலையாதா... கட்டையில போகபோகுது, எம்புல்லத்தா ஒனக்கு கெடச்சிசா" என்று வஞ்சக வார்த்தைகளினால் தூற்றினாள் சிறுமியின் அம்மா... மணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் கடலில் இருந்தவளைப் பார்க்கச் சென்றேன். “சரி… பாட்டி அத விட்டு தள்ளுங்க, அந்த புள்ளைய கூட்டிக்கிட்டு வந்து சாப்பாடலா குடுத்திங்க, ஆனா அந்தபுள்ள ஊமையா… இருந்தாளு ஒங்கள மாட்டிவுட்ருச்சே “சரி நா தா இனி ஒங்களுக்கு புள்ள என்றேன். மன மகிழ்ச்சி முகத்தில் தெரிந்தது.

இருப்பா வாரே, கருமாரிக்கு நேத்திவச்சிட்டு வாரே…! என்று மலை நோக்கி விரைந்தாள். “சவுக்கு மரத்துக் கீழ் அமர்ந்திருந்தாள். நான் சென்று பாட்டியை அழைத்தேன் நானும் பாட்டியும் அந்த ஒற்றையடிப் பாதையில் நடந்தோம். பாட்டிக்கு கண்கள் இரண்டிலும் சாரைப் பாம்புகள் வந்த வண்ணம் இருந்தன.

ஆறுதலான வார்த்தைகள் இரண்டிலும் அவள் சமாதானமாகவில்லை. வீட்டுக்கு விரைந்தோம். பாட்டி குசினில அப்பா வெத்தல பாக்கெல்லா வாங்கி வச்சிருக்காரு போய் எடுத்துக்குங்க என்று கூறி விட்டு பாயை விரித்து அரிக்கன் லாம்பை பக்கத்தில் வைத்து நானும் பாட்டியும் கண்ணயர்ந்தோம். திடீரென்று எழுந்து ஒரு வாய்க்கு வெத்தலய போட்டுக்குட்டு… கொக்காணியை இடுப்பில் சொருகினாள் மலையகத் தோட்டப் பெண்களின் ஒரு உயர்ந்த உடன்பிறப்பே அந்த கொக்காணித்தான்.

செங்கதிரவன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தான் நான் விரைந்து எழும்பினேன். காலில் தேயிலை கட்டை குத்தி கிழிக்கப் பட்ட சதயுமாய் பார்த்தேன்.

ஆச்சி கால்ல என்னா? இது.. இவளோ பெரிய காயமே” அது பரவால்லடா சின்ன காயெத்தா… “நீ சும்மா இரு நேத்து மலக்கி போரப்ப தேல கட்ட குத்திருச்சி அதுத்தா ..” அது பரவால்ல என்றாள்.

மனக்காயம் பட்ட அவளுக்கு உடல் காயம் பெரிதாகத் தெரியவில்லை. வழமைக்கு மாறாக பாசத்தை அள்ளி இறைத்தாள் பாவமவள்.
கவனமா சுகுலுக்குப் போ… நல்லாப் படிடா… என்று கூறினாள். அவள் கூறிய வார்த்தைகள் எனக்கு மன தைரியத்தையும் வலிமையையும் மெருகூட்டியது.
தைரியத்துடன் போராடிய அவளது கண்கள் கரைவது தெளிவாகியது. பொயிட்டு வாடா.. ஏ சாமி…” என்றுக் கூறிவிட்டு மயக்கத்தில் சாய்ந்தாள் இந்த மண்ணை நோக்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. மிதுர்ஷாலினி
தரம் 12
மமா/வ/இராகலை உயர் பாடசாலை

# சேற்றுக்குள் முத்து

காட்சி 1

மேடையமைப்பு

| | | |
|---|---|---|
| இடது மேல் | மேல் மத்தி | வலது மேல |
| இடது மத்தி | மத்திய மத்தி | வலது மத்தி |
| இடது கீழ் | கீழ் மத்தி | வலது கீழ |

களம்:- அவல ஓலத்தை வெளிப்படுத்தக்கூடியவாறாக அமைந்த பழைய வீடு
கதை மாந்தர்கள்:- பாப்பாத்தி (பிரதான கதாபாத்திரம்)
பொன்னுரங்கு (பாப்பாத்தியின் அம்மா)
மேகலா (பக்கத்து வீட்டுக்காரி)
ஒலி:- கல்யாணி ராகத்தில் அமைந்த ஒரு மெல்லிய வயலின் இசை
ஒளி:- ஒரு பச்சை நிறத்தினாலான ஒளி பாய்ப்படல்.
அமைப்பு:- வலது மேல் பகுதியில் சிறியதொரு அடுப்பங்கரை அமைக்கப்பட்டுள்ளது. உடைந்திருந்தாலும் மூன்று கதிரைகளின் நடுவே ஒரு கறைபிடித்த மேசை வைக்கப்பட்டிருத்தல். கீழ்மத்தி பகுதியில் ஒரு குப்பிலாம்பு வைக்கப்பட்டிருத்தல்.

(திரை மெல்ல மெல்ல விலக்கப்பட்டவாறு மேடை முழுவதும் முதலில் இருண்மயப்படுத்தப்பட்ட பின் ஒரு பச்சை நிறத்தினாலான ஒளி மேடை மீது பரப்பப்படுகின்றது. கடும் மழையுடன் கூடிய இடி மின்னல் சத்தத்திற்கான ஓசைகள் பின்னணியில் ஒலிக்கப்படுகின்றன. பாப்பாத்தி மத்திய மத்தி பகுதியில் கீழே அமர்ந்திருந்தவாறு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியுள்ளதைப் போல இருக்கிறாள்.)

பாப்பாத்தி:- அம்மா எங்க? இன்னும் காணோமே... (தனக்குள்) மழை வேற ஜாஸ்தியா கொட்டிட்டு இருக்கு. போதாத குறைக்கு இடி மின்னலும் கூட...

பொன்னுரங்கு:- மேடையில் இடது மேல் பகுதியில் இருந்து தலையில் கூடையுடனும் கிழிந்த கந்தையுடையை உடுத்தி மழையில் நனைந்த உடைகளை உதறியவாறு வருகிறாள்.

பொன்னுரங்கு:- சே...சே... சே... என்னா மழை இது? பேய் மழை. மழை வேணுமுனு போனகிழமை சங்கிலி கருப்பனோட கோயிலுக்கு போய் வேண்டிட்டு வந்தா, அந்த குலசாமி ஒட்டுமொத்தமாக கொட்டி தீர்க்குற அளவுக்கு மழையை கொடுத்துட்டாரே! (தனக்கு தானே)

பாப்பாத்தி:-என்னம்மா இவளவு நேரம்? உனக்காக நான் எவ்வளவு நேரமா காத்துக்கிட்டு கிடக்கேன் தெரியுமா? (செல்ல கோபத்துடன்)

பொன்னுரங்கு:- அடடடே!... எங்க கண்ணு எனக்காக காத்துக்கிட்டு இருந்துச்சோ... (பாப்பாத்தியின் தலையை வருடியவாறு)

பாப்பாத்தி:- ஆமா அம்மா... நான் இன்னைக்கு காலையில இருந்து சாப்பிடவே இல்ல. வெறும் பட்டினியா தா இருக்கேன். பசிக்குது அம்மா சாப்பாடு சமச்சு தாங்களே...

(பொன்னுரங்கு அடுப்பங்கரைக்கு சென்று சாமான் சட்டியை துலாவுகிறாள். வெறும் பானையைப் பார்த்து திகைத்துப் போகிறாள்.)

பாப்பாத்தி:- அம்மா! என்ன ஆச்சு? ஏன் இப்படி சுருங்கி போச்சு உங்க முகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுரங்கு:- அதெல்லாம் ஒன்னும் இல்ல... கொஞ்சம் பொறு நான் மேகலா வீட்டுக்கு போய்ட்டு ஒரு கொத்து அரிசி வாங்கிட்டு வந்துடுறன்.
பாப்பாத்தி:- சரிங்க அம்மா சீக்கிரம் வந்துடுங்க.
(பொன்னுரங்கு கீழ் மத்தியில் உள்ள மேகலா வீட்டுக்கு செல்கிறாள்.)
பொன்னுரங்கு:- மேகலா!... புள்ள மேகலா!...
மேகலா:- ஆ... இதோ வந்துட்டேன் அக்கா! (கூக்குரலிடல்) என்ன விஷயம் அக்கா.
பொன்னுரங்கு:- அது வந்து புள்ள. என்னோட மகள் அங்கு காலையில இருந்து சாப்பிடவே இல்ல. வெறும் வயிற்றிலேயே இருந்திருக்கா. சாப்பிடறதுக்கு ஒரு கொத்து அரிசி இருந்தா தாவே.
மேகலா:- அரிசினா இல்ல. ஆனா ஒரு கொத்து மாவுனா தாரேன் ரொட்டி சுட்டு குடுங்க.
பொன்னுரங்கு:- பரவாயில்ல. குடு.
(மேகலா அரிசி மாவை கொண்டு வந்து கொடுக்கிறாள்.)
மேகலா:- என்னக்கா இது ஒரே மழையா கிடக்கு. மழையிலயா நனஞ்சிட்டு வந்த. (முகத்தை சுலித்தவாறு)
பொன்னுரங்கு:- ஆமா மேகலா. மழையுட்டு அபரீதமான அன்பால காலப்போக்குல என்னோட அந்த பழைய வீடும், என்ன ஆகப்போகுதோ தெரியலயே.
மேகலா:- ம்... ம்... ம்... என்ன செய்ய மலையகத்தில் வாழுற தோட்ட தொழிலாளிகளுக்கு, சம்பளமும் ஒழுங்கில்ல தங்கி வாழ்வதற்கு ஒழுங்கான வீடும் இல்ல. (தலையில் அடித்தபடி)
பொன்னுரங்கு:- சரி. சரி. அங்கே என்னோட மகள் காத்துட்டு இருப்பா. நான் பொறவு வாரே. சீ. சீ. என்னடா இந்த மழை. வானத்துக்கும் பூமிக்கும் தந்தியடிச்சுக்கிட்டு கெடக்கு.

(புலம்பியவாறு மேடையின் மத்திய மத்தியக்கு வந்து அடுப்பங்கரைக்குள் செல்கிறாள்.)
பாப்பாத்தி:- அம்மா!... ரொம்ப பசிக்குது அம்மா. சீக்கிரம் அடுப்பில் ஓலையை வையுங்க.
பொன்னுரங்கு:- பாப்பாத்தி! அம்மாவ மன்னிச்சுக்கடா...
பாப்பாத்தி:- ஏன் அம்மா அப்படி சொல்லுறீங்க?
பொன்னுரங்கு:- இன்னைக்கு சாப்புடுறதுக்கு சோறு இல்லடா தங்கம். ஒரு கொத்து மாவுல ரொட்டி தான்டா செய்ய முடியும். (கவலையுடன்)
பாப்பாத்தி:- பரவாயில்ல அம்மா. இன்னைக்கு ராத்திரி சாப்பிட ரெண்டு வாய் சாப்பாடு இருந்தாலே போதும் சமாளிச்சிப்பேன்.
பொன்னுரங்கு:- சரிடா. கண்ணு. அம்மா சீக்கிரம் செஞ்சிடுறேன் சாப்புடலாம்.
(பாப்பாத்தி அம்மாவின் பின்னால் இருந்து கட்டியணைத்தபடி சில விடயங்களை கூறுகிறாள்.)
பாப்பாத்தி:- அம்மா!...
பொன்னுரங்கு:- ம் ம் ம்...
பாப்பாத்தி:- அ...ம்...மா...! நான் சொல்லுறத கொஞ்சம் கேளு அம்மா...
பொன்னுரங்கு:- கேட்டுட்டு தாண்டீ இருக்கே.
பாப்பாத்தி:- அம்மா நாளைக்கு எனக்கு ஒரு பரீட்சை நடக்க போகுது அம்மா... (கொஞ்சியபடி)
பொன்னுரங்கு:- என்னாது டீ? என்ன பண்ணனு அதுக்கு இப்ப? பரீட்சை நடந்தா போய் செய்துட்டு வாயே...
பாப்பாத்தி:- அதுக்கு இல்ல அம்மா. அது ரொம்ப பெரிய சோதனை. அதுல நான் பாஸ் ஆயிட்டா நான் லாயர் டிகிரி எடுத்துடுவேன். அதுதா... (தயங்கியபடி)
பொன்னுரங்கு:- பணம் வேணுமா? எவ்வளவு?
பாப்பாத்தி:- (ஆச்சரியம் கலந்த முகத்துடன்) ஆமா அம்மா!... மொத்தமா முப்பதாயிரம் ரூபா செலவாகும்னு சொல்றாங்க.
பொன்னுரங்கு:- ம் ம் ம்... சரி நாளைக்கு காலைல கட்டிடுறன். சரியா?
பாப்பாத்தி:- ம் ம் ம்...சரி.
(திரை மூடப்பட்டு திறக்கப்படல்)

**காட்சி 2**
மேடை அமைப்பு:- மத்திய மத்தி பகுதியில் பாப்பாத்தி உறங்கிக்கொண்டிருக்கிறாள்
களம்:- வீடு
பொழுது:- காலைப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி:- ஒரு சோகமான வயலின் இசை
ஒளி:- மேடையின் பின்திரையில் அக்குடும்பத்தின் அவல ஓலத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒரு காட்சி காட்சிப்படுத்தப்படல்.

கதை மாந்தர்கள்:- வேம்படி சுடலை (பொன்னுரங்கத்தின் அண்ணா)
பாப்பாத்தி (மகள்)
பொன்னுரங்கு (அம்மா)

(மேடையில் சிவப்பு நிற ஒளி பாய்ச்சப்பட்டவாறு ஒரு மெல்லிய வயலின் இசை இசைக்கப்படல். பாப்பாத்தி விழித்தெழுந்து சுற்றி முற்றி பார்க்கிறாள்.)

பாப்பாத்தி:- அம்மா! அம்மா! அம்மா! (கூவுகிறாள்.)
(வேம்படி சுடலை மேடையில் இடது கீழ் பகுதியில் இருந்து வருகிறார்.)
வேம்படி சுடலை:- என்ன புள்ள பாப்பாத்தி. அம்மாவயா தேடுற அவள் காலங்காத்தால தான் கையில ஏதோ நகை ஒன்ன எடுத்துகிட்டு அவசர அவசரமா கௌம்பி போனா.
பாப்பாத்தி:- (மனதுக்குள்) நகைய எடுத்துக்கிட்டா. அப்படி என்னதான் இந்த வீட்ல நகை கிடக்கு. ஒரு வேல நம்ம அப்பாவோட படத்துல போட்டிருந்த தாலிக்கொடியோ?
(பாப்பாத்தி மேடையின் மேல்மத்திக்கு ஓடிச்சென்று தன் அப்பாவின் படத்தினை உற்று நோக்குகிறாள்.)
பாப்பாத்தி:- அட ஆமா!...
பொன்னுரங்கு:- ஏய் புள்ள பாப்பாத்தி. இந்தா நீ கேட்ட பணம். போயிட்டு நல்லபடியா சோதனைய முடிச்சிட்டு வா. நீ ஒருத்தி தா இங்க ஒரு விடியல காட்டணும்.
பாப்பாத்தி:- (அழுதபடி) அம்மா! ஏன் இப்படி தாலிய வித்து காசு வாங்கிட்டு வார. அப்பா ஞாபகமா இருந்தது அது ஒன்னுதா. அதயும் இப்படி அடகு கடையில் அடகு வச்சிட்டு வாரீயே.
பொன்னுரங்கு:- அழாதடீ. நீ படிச்சு ஒரு லாயரா வந்தாதா, நம்ம மலையகத்துல உள்ள மத்த புள்ளங்க எல்லா உன்ன பார்த்து வளர ஆரம்பிக்கும்.
வேம்படி சுடலை:- அதுக்குன்னு இப்படியா தாலியை விற்ப? (கோபத்துடன்)
பொன்னுரங்கு:- அதுக்கு இல்லங்க அண்ணே!... கையில பத்து பைசா இல்ல. இன்னைய போக்க பார்த்தா இலங்கையில எந்தவொரு சாப்பாடு பண்டமும் கிடைக்காது போல. நாளுக்கு நாள் வெலவாசி கூடிட்டே போகுது எப்படி வளர்த்து, ஆளாக்கி இவள ஒரு கரை சேர்க்க போறேனு தெரியல. (குமுறி அழுதபடி)
பாப்பாத்தி:- ஐயோ!... அழுகாத அம்மா... நீ என்ன சொல்றியோ அத நான் கேட்டு ஒரு நல்ல இடத்துக்கு வருவேன் அம்மா!...
வேம்படி சுடலை:- அப்படி சொல்லடி என்னோட தங்கமே...
பொன்னுரங்கு:- தாலிய மட்டும் இல்ல. உனக்கு சாப்பாடு போட இப்ப எனக்கு விற்கிறதுக்கு இருக்க ஒரே ஒரு பொருள் இந்த வீடு தான். அது ஒன்னு தான் இப்ப கிடக்கு.
வேம்படி சுடலை:- என்ன பொன்னுரங்கு சொல்லுற? (ஆச்சரியம் கலந்த முகபாவனையுடன்)
பொன்னுரங்கு:- ஆமாங்க அண்ணே... நாளுக்கு நாள் ஒவ்வொன்னுக்கா இந்த அரசாங்கம் வெலவாசிய கூட்டிக்கிட்டே போகுது. சாப்பிடுற சாப்பாட கூட மிச்சம் வைக்காம பாலு, பிஸ்கட்டு, சோறு அது இதுனு எல்லாம் விலை தா.
பாப்பாத்தி:- ஆமா அம்மா!... போற போக்க பார்த்தா பசியில இன்னும் எத்தனை உயிர் போக போகுதோ.
பொன்னுரங்கு:- அதனால தாண்டி சொல்லுறேன். நம்மள மாதிரி தோட்ட தொழிலாளிகளுக்கு வறுமைய காட்டி காட்டியே கண்ணு மூடிட்டாங்க. உன்ன மாதிரி ஒருத்தி படிச்சு பட்டம் பெற்று வரும் போது தான் இங்கு ஒரு விடியல் பொறக்கும்.
பாப்பாத்தி:- (கம்பீரமான முகபாவனையுடன்) ம் ம் ம்... செய்யுறே நான் ஒரு பல்கலைக்கழகப்பட்டதாரியா வெளிய வாரே. அப்போ, அந்த இடத்துல உன்னை வச்சு அழகு பார்க்க செய்யுறே.
வேம்படி சுடலை:- ஆமான்டீ பொன்னுரங்கு. நம்ம எவ்வளவு வறுமையில வாடி காஞ்சி கருவாடாகினாலும், யாருட்டு சொத்தயும் அடிச்சு வாங்கல, திருடியும் வாங்கல... நேர்மையா ஒழச்சு சம்பாதிக்கிறோம். அந்த நல்ல எண்ணத்துக்கே உனக்கு நல்லதுதான் கிடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுரங்கு:- ம் ம் ம்... பார்ப்போம் அந்த கடவுள் என்னோட தலைவிதிய என்னானு எழுதியிருக்கானோ? (சலிப்புடன்) அது அந்த ஆண்டவனுக்குதா தெரியும்.
பாப்பாத்தி:- சரிமா. நான் போய் படிக்கிறே. நாளைக்கு சோதனை இருக்கு தானே.
(திரை மூடப்பட்டு திறக்கப்படல்)

**காட்சி 3**

மேடை அமைப்பு:- தெருவிதி ஒன்று, வலது மேல் பகுதியிலிருந்து இடது கீழ் பகுதி வரை அமைக்கப்பட்டிருத்தல். அவ்வீதியை சுற்றி வாகனங்கள் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருத்தல்.
களம்:- பெருவீதி
கதை மாந்தர்கள்:- பாப்பாத்தி
பொன்னுரங்கு
தபாற்காரன்
வேம்படி சுடலை
ரமேஷ்

ஒலி:- மரங்கள் அசைந்து ஆடியபடியாக பலத்த காற்றின் சப்தங்கள் பின்னணியில் ஒலிக்கபடல்.
ஒளி:- நீல நிறத்தாலன ஒளி மேடையில் பரப்பப்படல்.
பின் திரையில் ஒரு வீதியின் உருவப்படம் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல்.

(பாப்பாத்தி வலது கீழ் பகுதியிலிருந்து வருகிறாள். எதிரே ரமேஷ் வருகிறான்.)
ரமேஷ்:- ஆ... பாப்பாத்தி. எப்படி புள்ள இருக்குற?
பாப்பாத்தி:- நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்குற?
ரமேஷ்:- ஏதோ வாழ்க்கை ஓயாமல் ஓடிட்டு இருக்கு. (சலிப்புடன்)
பாப்பாத்தி:- அப்புறம், என்ன இந்த பக்கம்?
ரமேஷ்:- அது சும்மாதா. இந்த தோட்டம் எப்படி இருக்குனு பார்க்க வந்தேன். நான் இப்ப டுபாயில இருந்துதா வாரே. (பெருமிதத்துடன்)
பாப்பாத்தி:- டுபாயில இருந்தா?
ரமேஷ்:- ஆமா. மாசம் ஒரு லட்சம் சம்பளம். என்ன என்னோட மாரிமுத்து மாமாதா டுபாய்க்கு அனுப்பி வச்சாறு.
பாப்பாத்தி:- அப்படியா? நம்பவே முடியல. க்ளாஸ்லயும் கடசி ரேங்க்தா வாங்குவ. ஸ்கூலுக்கும் ஒழுங்கா வர மாட்ட. அப்புறம் எப்படி? (சந்தேகத்துடன்)
ரமேஷ்:- அதுக்கு படிப்பு, பட்டம்லா தேவையில்ல. கையில பணம் இருந்தா போதும் எதனையும் வாங்கலா. எதனையும் விற்கலாம். நீ எங்க, உங்கிட்ட சாதாரண வீடு, வசதி கூட இல்லையே... (கேலி புன்னகையுடன்)
பாப்பாத்தி:- பேய், என்னடா பெரிய பணம்? எனக்கு என்னோட படிப்பு இருக்கு. அது ஒன்னு போதும். எங்கிட்ட உள்ள மொத்த துன்பத்தையும் விரட்டி அடிக்கவும் முடியும். அந்த வறுமைக்கே வறுமைய காட்டவும் முடியும்.
ரமேஷ்:- செஞ்சிட்டாலும். நீ லோயர்க்கு படிக்கிறனு கேள்விப்பட்டேன் உண்மையா?
பாப்பாத்தி:- ஆமா. இப்ப அதுக்கு என்ன?
ரமேஷ்:- ஓ ஓ... அந்த குலசாமி நீங்க தானோ!...
பாப்பாத்தி:- என்னடா? பைத்தியம் மாதிரி ஏதோ ஏதோ பேசிக்கிட்டு கெடக்குற.
ரமேஷ்:- இல்ல, நீ தான் படிச்சு, பட்டம் வாங்கி நம்ம தோட்ட தொழிலாளிகளோட புள்ளகளுக்கு முன்னுதாரணமா இருக்க போறனு மலையில பேசிக்கிட்டாங்க, அதான் கேட்டேன். (கேலியான வார்த்தைகளை பேசுகிறான்)
பாப்பாத்தி:- இனி உன்கிட்ட பேசுறதுக்கு எனக்கு நேரமில்லை. நான் போறேன். (முகம் சிவந்து, கோபத்துடன்)

(இடது மேல் பகுதியிலிருந்து தபாற்காரன் ட்ரீங் ட்ரீங் ஆர்ன் சத்தத்துடன் சைக்கிள் வண்டியில் வருகிறான்.)
தபாற்காரன்:- ஏய் புள்ள!... அடியேய்!... நில்லு புள்ள. உனக்கு லெட்டரு வந்திருக்கு.
பாப்பாத்தி:- லெட்டரா? என்ன லெட்டரு சார்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபாற்காரன்:- தெரியல பாப்பாத்தி. இன்னைக்கு காலையில தான் வந்துச்சி. இந்தா இதுல ஒரு சைன போட்டுட்டு, பிரிச்சி படிச்சு பாரு.
அப்போ நான் வாரேன்!...

(பாப்பாத்தி கடிதத்தை பிரித்து படித்து விட்டு ஆனந்த கண்ணீருடன் துள்ளி குதிக்கிறாள். அங்கும் இங்கும் ஓடுகிறாள்)

பாப்பாத்தி:- அம்மா!... அம்மா!... மாமா!... மாமா!...
பொன்னுரங்கு:- என்னடீ விஷயம்? இப்படி சந்தோஷத்தில குதிச்சு வார.
பாப்பாத்தி:- அம்மா நான் போன மாசம் செஞ்ச பரீட்சையில பாஸ் ஆயிட்டே...
(துள்ளிக்குதித்து ஓடி திரிந்தபடி)
பொன்னுரங்கு:- என்னடீ சொல்லுற? (ஆனந்த கண்ணீருடன்) அண்ணே என்னோட பொண்ணு பாஸ் ஆகிட்டா. என்னோட பொண்ணு பாஸ் ஆகிட்டா. நான் கும்புட்ட கருப்பசாமி என்ன கை விடல.
வேம்படி சுடலை:- சந்தோஷம்டீ என் கண்ணு. (பாப்பாத்தியின் கன்னத்தை கிள்ளுகிறார்.) அப்புறம் என்ன? நீ ஒழச்சி ஒழிஞ்ச காலம் கழிஞ்சிடுச்சி இனி விடிவு காலம் தான்.
பாப்பாத்தி:- அம்மா இனிமேல் இந்த ஓட்டை வீடும், இந்த உடைந்த தகரப்பேணியும், இந்த கிழிந்த புடைவையும், அறுந்த சப்பாத்தும், குப்பிலாம்பும் எதுவுமே இனி தேவையில்ல.
பொன்னுரங்கு:- ஆமான்டீ... நீ வக்கீல் ஆயிட்ட. உன்னை அந்த வக்கீல் கோட்டில வாதாடுற அழக பாக்கணும்னுதா இன்னமும் இந்த உசுரு ஊசலாடிகிட்டு இருக்கு.
பாப்பாத்தி:- பார்ப்பீங்க அம்மா!... கூடிய சீக்கிரம் பார்ப்ப. நாளைக்கு கொழும்புல எங்களுக்கு பாராட்டு விழா நடத்துறாங்க. உன்னையும் கூட்டிட்டுதா போறேன்.
வேம்படி சுடலை:- அப்படியா? பொன்னுரங்கு நீ நாளைக்கு போய்ட்டு வா.
பொன்னுரங்கு:- (தயங்கியபடி) இல்லங்க அண்ணே. நான் எப்படி... (இழுத்த தொனியுடன்) அங்க பெரிய பெரிய இடத்து ஆளு எல்லாம் வருவாங்க. நான் எப்படி போறது?
பாப்பாத்தி:- வந்தா என்ன? நீ வார... இல்ல... இல்ல... வந்துதான் ஆகணும்.
( திரை மூடப்பட்டு திறக்கப்படல் )

**காட்சி 4**
மேடை அமைப்பு:- இடது மேல் பகுதியில் ஊடகவியலாளர்கள் அமர்ந்திருத்தல். மத்திய மத்தி பகுதியில் மைக் பூட்டப்பட்ட மேசை ஒன்று இருத்தல்.
கதாபாத்திரங்கள்:- ஊடகவியலாளர்கள்
பொன்னுரங்கு
பாப்பாத்தி
ஒளி:- ஒரு வெள்ளை நிற ஒளி மேடையில் பரப்பியவாறிருத்தல். புகைப்படம் எடுக்கப்படும் போது வரும் ஒளிகள் மாறி மாறி மேடை அமைப்பின் மீது பாய்ச்சப்படல்.

( வலது கீழ் பகுதியில் இருந்து பாப்பாத்தி ஊடகவியலாளர்களை நோக்கி வருகிறாள். )

ஊடகவியலாளர்கள்:- வணக்கம் பாப்பாத்தி! நீங்க எப்படி இவ்வளவு வறுமை நிலையில இருந்து இப்படி ஒரு பெரிய லோயராக வந்தீங்க. கொஞ்சம் சொல்ல முடியுமா? (பேட்டி காணல்)
பாப்பாத்தி:- ம் ம் ம்... இது எல்லாத்துக்கும் காரணம் என்னோட அம்மா தான்.
ஊடகவியலாளர்கள்:- அம்மாவா? எங்க உங்களோட அம்மா?
பாப்பாத்தி:- அம்மா!... அம்மா!... வா அம்மா!... நீ காத்துகிட்டு இருந்த நேரம் வந்துடுச்சி.

(பாப்பாத்தி அவல நிலையில் அமைந்த பொன்னுரங்கத்தை மேடையின் மத்திய பகுதிக்கு தோள் மீது கையை போட்டு பக்குவமாக அழைத்து வருகிறாள்.)

ஊடகவியலாளர்கள்:- சொல்லுங்க அம்மா. எப்படி இவ்வளவு கஷ்டத்துல உங்க பிள்ளைய படிக்க வச்சீங்க. அதுவும் ஒரு சாதாரண தோட்டத்தொழிலாளியாக இருந்து எப்படி உங்களால முடிஞ்சது? (மாறி மாறி ஒவ்வொருவரும் வினாக்களை தொடுத்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுரங்கு:- (தயங்கி தயங்கி) அது வந்து... வந்து...
பாப்பாத்தி:- அம்மா பேசுமா.
பொன்னுரங்கு:- நான் பொறந்ததுல இருந்து என்னோட ஆச நான் ஒரு வக்கீலா வரனுமெண்டுதான். ஆனா என்ன படிக்க வைக்க என்னோட ஆத்தா , அப்பனுக்கு அவ்வளவு காசும் இல்ல , ஒன்னும் இல்ல
ஊடகவியலாளர்கள்:- அப்பறோம்!...
பொன்னுரங்கு:- கொடிய பட்டினி. கூலு கஞ்சி குடிக்க கூட நாலு அஞ்சி பேரு கிட்ட காலுல விழனும். அன்னைக்கு தோனுனிச்சி என்னோட புள்ளய வக்கீல் ஆக்கிடனுமுன்னு.
ஊடகவியலாளர்கள்:- (கண்ணீர் சில துளிகள் வடிந்தவாறு) சொல்லுங்க... சொல்லுங்க...
பொன்னுரங்கு:- அப்புறம் என்ன!... அன்றைக்கு பிடித்த சனி என்னோட வாழ்நாள் முழுக்க தொடர்ந்து வந்துட்டே இருந்துடுச்சி. இந்த கொடுமைய என்னோட புள்ளயும் பட்டுடக் கூடாதுன்னு தா கஷ்டத்த கூட வெளியே சொல்லாம படிக்க வச்சிட்டேன் .
பாப்பாத்தி:- (குமுறி குமுறி அழுதபடி) அம்மா!... இனி நீ கலங்கவே கூடாது. இந்த பசியும் , பட்டினியும் தான் என்னை இந்த நிலைமைக்கு கொண்டு வந்து விட்டிருக்கு...
இனி நீ ராணி மாதிரி வாழ போகிற பார்த்துக்க.
ஊடகவியலாளர்கள்:- ஆமாங்க. உங்க பிள்ளைய இவ்வளவு நெருக்கடிக்கு மத்தியில வாழ வச்சிட்டீங்க. உண்மையாகவே நீங்க க்ரேட்.
ஒரு சாதாரண மலையகத்துல , தோட்டத் தொழிலாளியுட்டு பொண்ணு இன்றைக்கு ஒரு ஆலமரமா வளர்ந்து நிக்கிறாள் வறுமைங்குற சேற்றுக்குள் கிடச்ச முத்துங்க இவள். (சிரித்தபடி)
(பாப்பாத்தி மேடையில் மத்திய மத்தி பகுதிக்கு வருகிறாள் அனைவரும் கைகுலுக்கி பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றனர். பாப்பாத்தி அம்மாவை கட்டி தழுவி முத்தமிட்டவாறு மேடையின் முன் பகுதிக்கு வருகிறாள். மேடை முழுவதும் இருள்மயப்படுத்தப்படுகிறது. பாப்பாத்தி சபையோருக்கு ஒரு உரைஞராக ஆலோசனை கூறுகிறார். அவள் மீது மட்டும் ஒரு மஞ்சள் நிற ஒளி பரப்பப்படுகிறது. அதனோடு சேர்த்து ஒரு மெல்லிய வயலின் இசையும் இசைக்கப்படுகிறது.)

“இந்த உலகத்தில எதுவுமே நிலைக்கக்கூடியது இல்ல. வறுமையும் அப்படித்தான். சாதாரண மலையகத்துல வாழ்கிற தோட்டத் தொழில

ாளினும், வறுமை வந்து வாட்டுதேனும் அமைதியாகவே இருந்திடக் கூடாது. எதனையும், எப்படியும் விரட்டி அடித்து வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென முட்டி மோதி ஜெயிக்கணும். “கார்ள் மாக்ஸ்” வறுமையை தன்னோடு எஜமானுனு சொல்லுவாரு. காரணம் அந்த வறுமையினால தான் இன்றைக்கு ஒரு பெரிய புரட்சியாளரா உசந்து நிற்கிறாரு. நீயும் அப்படித்தான் வறுமை எனும் சேற்றுக்குள் வந்துதித்த முத்துக்களாய் உன்னையும், உன் கல்வியையும் உயர்த்தி ஏழ்மையை ஒழித்து விடியல் ஒன்றினை நோக்கி ஓடு” எல்லாப் புகழும் வறுமைக்கே!

(திரை மெதுவாக மூடப்படுகிறது.)

**முற்றும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை பிரிவு – 4
R. திலுக்ஷியா
மமா/வ/அருணோதயா இந்து கல்லூரி
கந்தப்பளை

## விஞ்ஞானமும் உலகும்

நவீன யுகத்தின் மாற்றம் விஞ்ஞானம் எனலாம். விஞ்ஞானமே உலக மாற்றத்திற்கு வித்திட்டது. நவீனத்துவத்தின் ஓர் கலைத்துவம் நடத்தும் ஆலமரமாக விஞ்ஞானம் வெளிப்படுகின்றது. குரங்கு முகம் மாறிய மனிதன் என்று சிந்திக்க தொடங்கினானோ அன்றே விஞ்ஞானம் தலைதூக்க ஆரம்பமாகிவிட்டது. குண்டூசி முதல் அணுகுண்டு தயாரிப்பு வரை எங்கும் எதிலும் விஞ்ஞானத்தைக் காணலாம்.

இவ்வாறான விஞ்ஞானம் நவீன உலகின் பல துறைகளிலும் மாற்றத்தினை ஏற்படுத்தி நிற்கின்றது. கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி, வேளாண்மை, தொழிநுட்பம், பொழுதுபோக்கு, விண்வெளி என அனைத்து துறைகளின் புரட்சிகரமான மாற்றத்திற்கும் விஞ்ஞானம் வழி அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் பயங்கரவாத செயல்களின் துரித அதிகரிப்பு, தொழினுட்பத்தில் தன்னை மூழ்கடித்துக்கொண்ட சமூகம் ஒன்றின் தோற்றத்தில் பங்கு கொள்ளல், போதைப்பொருட்களினால் அதிகம் பாதிக்கப்பட்ட சமூகம் ஒன்றின் தோற்றம் என பல பாதக விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றது விஞ்ஞானம்.

இன்றைய சமூகத்தினரைப் பொறுத்தவரை கடவுள் என்பவன் வைத்தியன், கோயில் என்பது மருத்துவத்துறை என்றாகிவிட்டது. மருத்துவத்தில் விஞ்ஞானத்தின் ஆதிக்கம் வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. கண் மாற்று சிகிச்சை, இதயமாற்று சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை என்பவற்றோடு குழந்தையின்மையைப் போக்கும் அளவிற்கு விஞ்ஞானம் மருத்துவத்துறையில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. எடுத்துக்காட்டாக பரிசோதனைக் குழாய் ஒன்றினுள் சிசு ஒன்றை வளர்த்து பிரசவித்தபோது விஞ்ஞர்னம் மருத்துவ துறையில் தலைநிமிர்ந்து நின்றது.

மேலும் அறிவியல் துறையில் விஞ்ஞானம் ஏற்படுத்தாத மாற்றங்கள் இல்லை என்று கூட கூறலாம். உலகம் நவீனத்துவம் அடையக் காரணமே அறிவியலில் ஏற்பட்ட மாற்றம்தான் பல்வேறு இயந்திர சாதனங்களைக் கண்டறிந்த விஞ்ஞானிகள் உலகின் நவீனத்துவத்திற்கு வித்திட்டனர். எடுத்துக்காட்டாக ஏர் பூட்டி உழுதவன் இன்று உளவு இயந்திரத்தின் மூலம் தன் வேலையை இலகுவாக்கிக் கொண்டான். நெசவுப் பொறியால் ஆடைகளை நெய்தவன் இன்று தன் வேலையின் வேகத்தை அதிகரிக்க பல்வேறு இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றான்.

விஞ்ஞான உலகின் தொடர்ச்சி காலம் சென்றாலும் அழிந்து போகாது. இன்றைய உலகின் தொழில் துறைகள் பெரும்பாலும் விஞ்ஞானம் சார்ந்ததாகவே காணப்படுகின்றன. எதிர்கால தொழில்துறைக்கு செல்லப் போவது இன்றைய இளந்தலைமுறையினரே எனவே அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி விஞ்ஞானம் கலந்த கல்வியாகவே உள்ளது. இதனால் விஞ்ஞான அறிவு கூர்மைப்படுத்தப்பட்டு இளந்தலைமுறையினர் விஞ்ஞானத்துவத்தினை உலகில் நிலைநிறுத்தப்போவதை யாராலும் மறுக்கவோ மறுக்கடிக்கவோ இயலாது.

வேளாண்மை சமூகத்தினரின் உழைப்பு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுவிட்டது. சனத்தொகையின் துரித வளர்ச்சியால் உலகம் அடையப்போகும் பட்டினி நிலையை போக்கவல்ல ஆயுதமே வேளாண்மை சமூகம் “இந்த பட்டினியை மனித உழைப்பால் மாத்திரம் போக்கிவிட முடியுமா?” என்பது ஓர் வினாவே இவர்களின் இந்த நிலையை தீர்க்க விஞ்ஞானம் இவர்களின் தோழனாகின்றது. நவீன பல இயந்திரங்களால் இவர்களின் வேலைகள் இலகுவாக்கப்படுவதோடு மேலும் பல நவீன இரசாயனப் பொருட்களால் விளைச்சல் விரைவுப்படுத்தப்படுவதோடு அதிகரிக்கவும் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களினூடாக இன்றைய மக்கள் வாழ்வு மகிழ்ச்சியடைகின்றது. பல்வகை பாடல்களை கேட்டல், காணொளிகளை பார்த்தல், பல காணொளி விளையாட்டுக்களை விளையாடல் என நாளும் கோளும் மகிழ்ச்சியாய் நகர்கின்றது. உலகை குக்கிராமமாக்கி தொடர்பாடல் தொழினுட்பத்தில் விஞ்ஞானம் உலாவருகின்றது. உலகில் எந்த மூலையில் நடக்கும் விடயங்களைக் கூட எங்களால் உடனுக்குடனான செய்திகளாக பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இவை அனைத்தும் ஒருபுறம் இருக்க விஞ்ஞானம் வித்தியாசமான ஒரு பாணியில் சிந்திக்கிறது. பூமிதனில் சாகச வேலைகள் நடக்க விண்வெளியில் நின்று பூமி அழகை இரசிக்கின்றது. சூரியன், சூரியனை சுற்றி வரும் கோள்கள், கோள்களின் உபகோள்கள் என ஞாயிற்று தொகுதியின் அசைவுகளை படம்பிடித்த வண்ணமே புவியின் ஒவ்வொரு அசைவினையும் பற்றி உடனுக்குடனான தகவல்கள் அனுப்பப்பட்ட வண்ணமே உள்ளன. இவற்றால் எம் உலகை பல அனர்த்தங்களில் சேர்ந்து அல்லது குறைக்கவோ முடிகின்றது.

இவை அனைத்தும் ஒருபுறம் சீராக நடந்துச் சென்றவாறு உள்ள அதேவேளை விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட சீர்கேடுகள் வெட்ட வெளிச்சமாகின்றன. உன்னை அழிக்க நூறு யானைகள் தேவையில்லை ஒரு குண்டூசி முனையின் அசைவில் என்னால் உன்னை வீழ்த்த முடியும் என பயங்கரவாதிகள் ஒருபுறம் செயற்பட, நுண்ணறிவு குன்றிய, பாரம்பரியம் மறக்கடிக்கப்பட்ட, தொழினுட்பத்தினுல் மூழ்கி தன்மை மறந்த, போதைப்பொருளுக்கு அடிமையான சமூகம் ஒன்று மறுபுறம் தோற்றம் காட்டுகின்றது.

விஞ்ஞான விருத்தியே தேவையில்லை என்கிற அளவிற்கு இன்றைய சமூகம் சீரழிந்து செல்கின்றது. தன் பகைமை நாட்டை அழிக்க சூழ்ச்சி செய்யும் ஒருசாராரின் குறியில் சம்பந்தமற்ற சில பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். இவற்றின் தாக்கம் சில வேளைகளில் பல தசாப்தங்கள் கடந்தும் தொடரும், மேற்கோள்காட்டி கூறினால் உலகப் போரின் போது தாக்கப்பட்ட ஹிரோசிமா, நாகசாயி என்ற இரு நகரங்களின் நிலை இன்றளவும் கேள்விக்குறியாகின்றது. தற்போது கூட அங்கு புல் பூண்டுகள் முளைக்கும் சாத்தியக்கூறுகள் சிறிதளவும் இல்லை. பிறக்கும் குழந்தை வரை அந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் போதைப் பொருள் பாவனையால் சமூகம் சீர்குலைந்து செல்கின்றது. கள்ளு, சாராயம், கஞ்சா போன்றன இன்று திரிபடைந்து பல்வேறு வகையில் உருவெடுத்துள்ளன. பல்வேறு இனிப்புப் பொருட்கள், ஔடதங்கள், குளிசைகள் மற்றும் போதைப்பொருள் ஊசிகள் என உருமாறியுள்ளன. பலர் இதற்கு அடிமையாவதுடன் அவற்றினை மறைமுகமாகக் கடத்திச் சென்று விற்பனை செய்வதிலும் தன் ஈடுபாட்டினை காட்டுகின்றன. ஹெரோயின், கொக்கையின், அபீன் போன்ற போதைப்பொருட்கள் நவீனத்துவத்திற்கமைவாக உருமாற்றம் பெற்றுள்ளன. இவற்றினால் பலரும் நோய்வாய்ப்பட்டு இறக்கின்றனர்.

மேலும் நுண்ணறிவு சார் விடயங்களில் ஈடுபட்டு வந்தவர்கள் கூட தொழினுட்பத்திற்குள் தன்னை மூழ்கடித்துக் கொண்டு செயற்படுவதோடு போதைப் பொருளிற்கும் அடிமையாகின்றனர். இவற்றால் நுண்ணறிவு வளர்ச்சிக் குன்றுவதோடு நேரமுழ்கடிப்பு, கல்வி முழ்கடிப்பு என காலம் நகர்கின்றது. தொழினுட்பத்தில் மூழ்கிப்போன இன்றைய சமுதாயம் பாரம்பரியம் மறக்கடிக்கப்பட்டு நடத்தை, நாகரிகம், உறவு, காதல், கற்பு. கல்வி, அறிவு என அனைத்தும் மாற்றமுற்ற அடுத்த சமுதாயத்திற்கு வழிவகுக்கின்றது.

யப்பானின் குரங்கு ஒன்றுக்கு மனிதமூளை பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளது, இனி குரங்குகளும் மனிதனைப் போல் சிந்திக்கத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை இவ்வாறிருக்க மனிதன் சிந்திக்காமல் பிற விடயங்களுக்கு அடிமையானால் அது மனித வர்க்கத்தின் அழிவிற்கே வழிவகுக்கக்கூடும் எனவே இன்றைய சமூகத்தினர் மாறி அடுத்த தலைமுறையினரையும் மாற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இளந்தலைமுறையினர் எதற்கும் அடிமையாகாமல் விஞ்ஞானத்தை கற்று விஞ்ஞானமயம் செய்ய இன்றைய தலைமுறையினர் பாடுபடவேண்டியது அவசியம். போதைப்பொருள், தொழினுட்பம் சார் விளிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றால் விளையப்போகும் சமூக மாற்றம்பற்றியும் எடுத்துக்கூறி அடுத்த தலைமுறையை நன்கு வாழவைப்போம். விஞ்ஞானம் இன்றேல் உலகமயமாக்கம் கிடையாது. உலகில் விஞ்ஞானம் மறுவி விஞ்ஞானத்தில் உலகம் என்றாகிவிட்டது.

**இலக்கியம் நயத்தல்**

உலகமயமாக்கம் தொடங்கிய பின்னும் கூட நாளையும் நேரத்தையும் பார்த்து செயற்படும் மானுடம் அவற்றில் அடிமையான விதம் பற்றியும், அவற்றால் எந்த நேரத்திலும் நன்மைதான் விளைய வேண்டும் என நிச்சயிக்கப்படவில்லை என்றும, சாஸ்திர சம்பிரதாயங்களை நம்பி செயற்பட்ட அனைத்தும் சுபமாக முடியவில்லை என்றும் தன் கவி ஆளுமையை கொண்டு அனைவருக்கும் விளக்கியுள்ளார் கவிஞர்.

மேலும் கவிதா ஆளுமை பண்பாக வெளிப்படுத்தப்பட்ட விதம் வியக்கத்தக்கதாக அமைந்தது. தன் கவிதா ஆளுமையை கவிஞர் பல உத்திகளைக் கைக்கொண்டு விளித்துரைத்துள்ளார். அனைவரும் அறியக்கூடிய மொழிநடையில், கேட்கும் போது பாமரத்தானும் அறியக்கூடிய விதமாக கவிஞர் கவிதையை வார்த்துள்ளார். பல வம்சக்கதைகளில் நடந்த சம்பவங்களை தன் கவிதையில் புகுத்திக் காட்டியுள்ளமையின் மூலம் கவிஞனின் பரந்த வாசிப்புத்திறன் வெளிப்படுத்தப்படுகின்றது. இராமாயணத்தில் இராமன் வனவாசம் சென்ற சம்பவம், சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கைம்பெண்நிலை என்பவற்றை இதற்கு மேற்கோளாகக் காட்டலாம்.

மேலும் மதியை அதாவது நிலாவை கடவுளாக எண்ணி வணங்கி வழிபாடு செய்து வந்தவர்கள் வழிபாடு செய்துகொண்டு மட்டுமேயிருக்க அந்த நிலாவையே அருகில் வந்து நின்று பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் விரைந்து நிலாவில் கால்தடம் பதித்த ஆம்ஸ்ட்ரோங்கின் வெற்றியை முறைமுகமாக தன் கவிதையில் புகுத்திக் காட்டிய விடயம் அவர் தன் கவிதா ஆளுமையை பறைசாற்ற கைகொண்ட உத்தியாகும்.

"மதியை மதித்தவன்
வாகனத்தில் ஏறி
மதியை மிதித்து வந்தான்…."என்ற வரிகளுடாக இந்த கவிஞனின் கவித்துவ உணர்வு வெளிப்படுத்தப்
படுகின்றது.

தன் இயலாமையை தன் தலைவிதியென எண்ணி சிறிதும் முயற்சிக்காத நிலையில் உள்ளவர்களின் இழிவு நிலையை தன் கவிக்குள் நிலைநிறுத்திய விதம் மிக சிறப்பான அழகினை கவிதைக்குத் தருகின்றது. இதனை கவிஞர் வடித்துள்ள விதம் இவ்வாறு அமைகின்றது.

"…… தலை
விதியை நம்பி
விழுந்தவனே! நீ
விழுந்தே கிடக்கின்றாய்…."

மேலும் கைரேகை பார்த்தல், ஜோதிடக் கருத்துக்களை கேட்டல் போன்ற அழகியல் சார் அம்சங்களை தன் கவிக்குள் மிக சிறப்பான முறையில் கைக்கொண்டு காட்டியுள்ளார். மேலும் வெற்றிபெற வியர்வை சிந்தி உழைக்கலாம் தலை விதியை நம்பத்தேவையில்லை என கூறியுள்ளார். மேலும் அதனை வெளிப்படுத்த மரபுத்தொடர்களையும் தன் கவிக்குள் நிலை நிறுத்திக் கொண்ட விதம் கவிதையை மிளிரச் செய்யும் வண்ணம் அமைந்துள்ளது. அது "நீரில் எழுத்தானாய்" என குறிப்பிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவற்றில் நயத்தலுக்கான விடயங்களாக என்னை ஈர்த்த விடயங்கள் கவிஞனின் கவிதா ஆளுமையின் உயர் நிலையை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. தன் கைகளை நம்பி நன்கு உழைக்கும் ஒருவனின் எதிர்காலமே மிக சிறப்பாக அமையும். ஆனால் அவற்றை மறந்து பொய்மையான கைரேகையை பார்த்து வாழ்க்கையை முடிவு செய்பவர்களை "பொய்மையின் வழி போனவனே" எனக் கவிஞர் கூறுகிறார். இது கவிதையில் வார்க்கப்பட்டுள்ள

"கைகளில் தான் வன்
வருங்காலம் அது
கைகளின் சகத்தியிலே – வெறும்
பொய்களின் வழியில்
போனவனே! அதை
ரேகையில் தேடுகிறோம்..."

இராமன், கண்ணகி ஆகியோர் மக்களால் கடவுளாக மதிக்கப்படுகின்றவர்கள். ஆனால் கவிஞன் அவர்கள் வாழ்விலும் நடந்த சாஸ்திர சம்பிரதாயத் தோல்வியை மிக அழகாக எடுத்துரைத்த விதம் நயத்தலை தோற்றுவிக்கின்றது. எடுத்துக்காட்டாக நாள் நேரம் பார்த்து பட்டாபிஷேகம் செய்ய தீர்மானிக்கப்பட்ட இராமன் காடாள சென்றது வியக்க வைக்ககூடிய சம்பவம். அது பின்வருமாறு கவிஞனின் மொழியாக வெளிவந்துள்ளது.

"கோளும் நாளும்
குறித்து ராமன்
கொற்றவன் ஆவதற்கு – அந்த
நாளில் என்ன
நடந்தது பாவம்
நடந்தான் காட்டுக்கு..."

மேலும் கண்ணகி வாழ்வில் நடந்த விடயம் அடிகோடிட்டு காட்டக்கூடிய விதமாக அமைகின்றது. நாள் நேரம் பார்த்து நடந்த கண்ணகியின் திருமண வாழ்வு என்னவாகியது? என்பது வினாவாகும் விதம் கண்ணகியின் கைம்பெண் நிலையை விளக்கி நயந்துள்ளார்.

".. காலம் பார்த்து
நடந்ததுதானே
கண்ணகி கல்யாணம்...."

என கண்ணகியின் நிலை வெளிப்படுத்தப்படுகின்றது.

தன் உழைப்பினை நம்பினால் மாத்திரமே வெற்றி பெறலாம் எனவும், பொய்யுரைக்கும் சாஸ்திரங்கள் பின்னால் செல்பவர்களை இகழ்ந்தும் தன் கவிதா ஆளுமையை வெளிப்படுத்தி காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகளுக்கென தெரிவுசெய்யப்பட்ட செயற்குழு விபரம் 2022

- **வலய மட்டப்போட்டிக்கான (வலய பொறுப்பாளர்) போட்டிகள்**
  திரு.க. காந்தரூபன் - உதவி கல்விப்பணிப்பாளர் (தமிழ்பொழி)

- **வலய மட்டப்போட்டிகளுக்கான பிரதம தீர்ப்பாளரும் இணைப்பொறுபாளரும்**
  திரு.எஸ். ஜனார்தனன் - ஆசிரிய ஆலோசகன் (தமிழ் மொழி)

- **வலய மட்டப்போட்டிக்கான தலைவர்**
  திரு.மை .பன்னீர் செல்வம் - அதிபர்- இராகலை உயர் பாடசாலை

- **வலய மட்டப்போட்டிக்கான செயளாளர்**
  திரு.எல். ஜோசப் - அதிபர்- டலோஸ் தமிழ் மகா வித்தியாலயம்

- **வலய மட்டப்போட்டிக்கான பொருளாளர்**
  திரு.எம் .டயஸ்குமார் - அதிபர்- அருணோதயா .இந்துக்கல்லூரி

- **வலய மட்டப்போட்டிக்கான குழு உறுப்பினர்கள்**

**திரு.எஸ்.சந்திரசேகரன் -அதிபர்- சில்வர்கண்டி த.வி**
**திருமதி.எம்.ஆர்.பிரியதர்சினி - அதிபர்- சென் லெனாட்ஸ் த.ம.வி**
**திரு.எஸ்.செல்வகுமார் - அதிபர் - மகாஊவா த.வி**
**திரு.டி.திலகேஷ்வரன் - அதிபர் - ஹைய்பொரஸட் த.வி**
**திரு.கே.ஞானபிரகாசம் - அதிபர் - லிடஸ்டேல் த.வி**
**திரு.பி.முகுந்கமலவண்ணன் - அதிபர் - எமஸ்ட் த.வி**
**திரு.எஸ்.சசிக்குமார் - அதிபர்- (தமிழ்பிரிவு) சூரியகாபத்தனை த.வி**

## வலய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகளுக்கென தெரிவுசெய்யப்பட்ட பொறுப்பாசிரியர்கள் விபரம்

**திரு.எஸ்.இளங்கோவன்-ஆசிரியர் - இராகலை உயர் பாடசாலை**
**திரு.ப.முத்தையா - ஆசிரியர் - அருனோதயா இந்துக்கல்லூரி**
**திரு.ஜி.பிரதீபன் - ஆசிரயர் - ஹைய்பொரஸட் த.வி**
**திருமதி.டி.அருள் - ஆசிரியை மகா ஊவா த.வி**
**திருமதி.ஆர்.வசந்தி - ஆசிரியை - சென்.லெனாட்ஸ் த.ம.வி**
**திருமதி.எஸ்.சைலஜா- ஆசிரியை - ஆசிரியை - சூரியகாபத்தனை த.வி**
**திருமதி.பி.திசாந்தினி - ஆசிரியை - டலோஸ் தமிழ் மகா வித்தியாலயம்**
**திருமதி.இரா.ஜெயப்பிரியா - ஆசிரியை - லிடஸ்டேல் த.வி**
**திருமதி.எஸ்.சசிகலா - ஆசிரியை - எமஸ்ட் த.வி**
**திருமதி.ஏ.புனிதகலா - ஆசிரியை - சில்வர்கண்டி த.வி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை தமிழ் மொழித் தினம் - 2022 வலய மட்டம் - வலப்பனை

| பிரிவு | போட்டி நிகழ்ச்சி | பாடசாலையின் பெயர் | போட்டியாளர் இல | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|---|---|---|
| 04 | கட்டுரை எழுதுதல் இலக்கிய நயத்தல் | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 04 | R. திலுக்சியா | 1 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 03 | R. யுனிசிகா | 2 |
| | | ம.மா/வ/எம்ஸ்ட் த.வி | 05 | N. கொசல்யா | 3 |
| 05 | கட்டுரை எழுதுதல் இலக்கிய நயத்தல் | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 14 | V. மதுசா | 1 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 13 | R. லிசாந்தினி | 2 |
| | | ம.மா/வ/சென்.லெனாட்ஸ் த.ம.வி | 12 | A. விபாசிகா | 3 |
| 04 | இலக்கண போட்டி | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 21 | T. துலக்சனா | 1 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 23 | S. சஞ்ஞீத்தா | 2 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 24 | S. சஸ்மிதா | 3 |
| 05 | இலக்கண போட்டி | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 33 | T. திலுக்சா | 1 |
| | | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 31 | S. சம்மிக்கா | 2 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 34 | T. வசித்திரா | 3 |
| 05 | திறனாய்வு | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 41 | S. டசிந்தா | 1 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 44 | C. சத்தியகலா | 2 |
| | | ம.மா/வ/மகாஊவா த.ம.வி | 45 | Y. ஹரனி | 3 |
| 05 | கவிதையாக்கம் | ம.மா/வ/மகாஊவா த.ம.வி | 85 | S. என்டன்சாரல்ஸ் | 1 |
| | | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 81 | S. ஷக்தி | 2 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 83 | K. லேகாந்தினி | 3 |
| 04 | சிறுகதையாக்கம் | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 94 | U. விதுர்சன் | 1 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 93 | L. சந்துரு | 2 |
| | | ம.மா/வ/எமஸ்ட் த.வி | 95 | S. சந்தோஷ் | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | போட்டி நிகழ்ச்சி | பாடசாலையின் பெயர் | போட்டியாளர் இல | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|---|---|---|
| 05 | சிறுகதை ஆக்கம் | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 104 | G. மணிமேனகா | 1 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 103 | K. தக்ஷிலானி | 2 |
| | | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 101 | P. தினுஷிலா | 3 |
| 04 | பேச்சு | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 114 | M. யது | 1 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 113 | C. டிலுக்ஷிகா | 2 |
| | | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 111 | S. மிருக்ஷனா | 3 |
| 05 | பேச்சு | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 121 | V. சதுர்ஷா | 1 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 124 | K. சிந்துஜா | 2 |
| | | ம.மா/வ/சென்.லெனாட்ஸ் த.ம.வி | 122 | V. விஜோனியா | 3 |
| 04 | பாவோதல் | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 134 | C. விஷ்ணுபிரியா | 1 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 133 | R. பியூலா | 2 |
| | | ம.மா/வ/எமஸ்ட் த.வி | 135 | P. மதுரிசா | 3 |
| 05 | இலக்கிய விமர்சனம் | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 143 | B. சதுர்ஷிகா | 1 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 144 | S. சிவானுஜா | 2 |
| | | ம.மா/வ/சென்.லெனாட்ஸ் த.ம.வி | 142 | K. தர்ஷினி | 3 |
| 04 | குறுநாடக ஆக்கம் | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 51 | S. கிருஸ்ணஹர்ஷா | 1 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 54 | D. தில்ஷினி | 2 |
| | | ம.மா/வ/சூரியஹபத்தன வித்தியாலயம் | 60 | B. விதுர்சன் | 3 |
| 05 | குறுநாடக ஆக்கம் | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 61 | V. மிதுர்ஷாலினி | 1 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | 64 | G. நிரஞ்ஜலா | 2 |
| | | ம.மா/வ/மகாஊவா த.ம.வி | 65 | K. சிம்மேந்திரா | 3 |
| 04 | கவிதை ஆக்கம் | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | 71 | T. பவிக்ஷனா | 1 |
| | | ம.மா/வ/ஹைய்பொரஸ்ட் இல 03 த.வி | 77 | M. சத்தியா | 2 |
| | | ம.மா/வ/டலோஸ் த.ம.வி | 73 | P. டிலக்ஷிபிரியா | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | போட்டி நிகழ்ச்சி | பாடசாலையின் பெயர் | போட்டியாளர் இல | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|---|---|---|
| 04 | தனி நடிப்பு | ம.மா/வ/லிடஸ்டேல் த.வி | | S. நேதராஞ்சலி | 1 |
| | | ம.மா/வ/எமஸ்ட் த.வி | | R. தயாளினி | 2 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துககல்லூரி | | S. டிலக்ஷன் | 3 |
| 05 | அறிவிப்பாளர் | ம.மா/வ/சென்.லெனாட்ஸ் த.ம.வி | | R. சரணியா | 1 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | | P. சசிதரன் | 2 |
| | | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | | S. யசோதரன் | 3 |
| 04 | இசை தனி | ம.மா/வ/எமஸ்ட் த.வி | | G. திலிசினி | 1 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | | S. கோகிலாதேவி | 2 |
| | | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | | U. லனுக்ஷினி | 3 |
| 05 | இசை தனி | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | | Y. கீர்த்தனா | 1 |
| | | ம.மா/வ/அருனோதயா இந்துக்கல்லூரி | | R. தர்ஷாயினி | 2 |
| 04 | தனி நடனம் | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | | S. தனுர்சினி | 1 |
| 05 | தனி நடனம் | ம.மா/வ/இராகலை உயர்நிலை பாடசாலை | | J. தினுஜா | 1 |
| திறந்த போட்டி | | வ/சில்வர்கண்டி த.வி | | R. அபிநயா<br>T. ரன்ஞன்<br>S. கோபிநாத்<br>T. பவித்ரா<br>K. காஞ்சனா | |
| | | ம.மா/வ/மகாஊவா த.ம.வி | | K. சிம்மேந்திரா<br>R. நிமேதா<br>V. டயஸ்வர்தனி<br>. பத்மினிதேவி<br>J. நபிதா<br>. லதுஷன் | |
| | | ம.மா/வ/எமஸ்ட் த.வி | | S. ஷதுர்ஷி<br>C. சாலினி<br>R. சுதேசன்<br>V. சபீஷனா<br>M. சந்தியா<br>L. தனுஷிகா | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | போட்டி நிகழ்ச்சி | பாடசாலையின் பெயர் | போட்டியாளர் இல | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|---|---|---|
| திறந்த போட்டி | | ம.மா/வ/ இராகலை உயர் நிலை பாடசாலை | | T. ஸனுஸா | 01 |
| | | | | Y. கீர்த்தனா | |
| | | | | S. ஹரணியா | |
| | | | | N. யதுர்ஷினி | |
| | | | | M. மிதுர்ஷனா | |
| | | | | Y. கிறிஸ்டினா | |
| | | | | K. சதுர்ஷிகா | |
| | | | | U. ஸனுக்ஸினி | |
| | | | | P. துனஷாலினி | |
| | | | | K. பிரதீஸா | |
| | | லிடெஸ்டேல் தமிழ் வித்தியாலயம் | | K. சிரோஜினி | 02 |
| | | | | B. சர்வலோஜினி | |
| | | | | S. கவிதாஞ்சலி | |
| | | | | S. தர்ஷினி | |
| | | | | K. கோபிஷா | |
| | | | | M. தக்ஸல்யாசினி | |
| | | | | C. மெல்சின் ரீட்டா | |
| | | | | S. பிரிசில்லா | |
| | | | | G. கஜானி | |
| | | அருணோதயா இந்து கல்லூரி | | M. தர்சிகா | 03 |
| | | | | G. நிரஞ்சனா | |
| | | | | R. தனுஜா | |
| | | | | S. விக்னேஸ் | |
| | | | | S. கோகிலா | |
| | | | | R. தர்ஷாயினி | |
| | | | | T. தில்ஷாலனி | |
| | | | | R. நிதோசினி | |
| | | | | S. சஸ்மிதா | |
| | | | | P. பிரவினா | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | | | | | |
|---|---|---|---|---|---|
| திறந்த போட்டி | இலக்கிய நாடகம் | அருணோதயா இந்து கல்லூரி | | S. டிலக்ஷன்<br>A. ஜென்சிரோஷல்<br>B. தேவப்பிரியா<br>P. சாலினி<br>R. வசீகரன்<br>S. அம்சவரதன்<br>K. கர்ணன்<br>G. நிதர்ஷபிரசாத்<br>C. விஸ்னுப்பிரியா<br>M. டிலுக்ஸ்கரன்<br>M. திலிப்சன்<br>I. சபீத் | 01 |
| | | ம.மா/வ/ மகாஊவா தமிழ் வித்தியாலயம் | | P. காஞ்சனா<br>S. டிலக்ஸ்மி<br>K. நிஸாந்தி<br>S. சாரியாலியாஷா<br>K. கவிஸ்கா<br>S. என்டன் சால்ஸ்<br>V. கிஷார்த்தன்<br>V. திலான் | 02 |
| திறந்த போட்டி | வில்லுப்பாட்டு | ம.மா/வ/ மகாஊவா தமிழ் வித்தியாலயம் | | R. கிருஸ்ணவாணி<br>Y. கவிவள பிரமோதியா<br>M. தர்ஷாலினி<br>K. தேணிசைவேணி<br>R. கீர்த்தா ஜெஷ்மி<br>S. கிலிண்டன்<br>M. கவினேஸ் | 01 |
| | | அருணோதயா இந்து கல்லூரி | | G. பிரவிஞ்சனா<br>B. தர்ஷிகா<br>R. சிடேனியா<br>P. சந்தியா<br>A. ஜெரிட்டன்<br>P. நிமல்ராஜ்<br>B. அபிசேக் | 02 |
| | | ஹைபொரஸ்ட் இல- 03 தமிழ் வித்தியாலயம் | | K. பிரவினா<br>J. கீர்த்திகா<br>S. ஹோமித்தா<br>M. கபிலாஷினி<br>T. வக்ஷன்<br>I. ஹரன்<br>R. ரிசாக்காந் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திறந்த போட்டி | இலக்கிய நாடகம் | அருணோதயா இந்து கல்லூரி | | S. டிலக்ஷன்<br>A. ஜென்சிரோஷல்<br>B. தேவப்பிரியா<br>P. சாலினி<br>R. வசீகரன்<br>S. அம்சவரதன்<br>K. கர்ணன்<br>G. நிதர்ஷபிரசாத்<br>C. விஸ்னுப்பிரியா<br>M. டிலுக்ஸ்கரன்<br>M. திலிப்சன்<br>I. சபீத் | 01 |
| | | ம.மா/வ/ மகாஊவா தமிழ் வித்தியாலயம் | | P. காஞ்சனா<br>S. டிலக்ஸ்மி<br>K. நிஸாந்தி<br>S. சாரியாலியாஷா<br>K. கவிஸ்கா<br>S. என்டன் சால்ஸ்<br>V. கிஷார்த்தன்<br>V. திலான் | 02 |
| திறந்த போட்டி | வில்லுப்பாட்டு | ம.மா/வ/ மகாஊவா தமிழ் வித்தியாலயம் | | R. கிருஸ்ணவாணி<br>Y. கவிவள பிரமோதியா<br>M. தர்ஷாலினி<br>K. தேணிசைவேணி<br>R. கீர்த்தா ஜெஷ்மி<br>S. கிலிண்டன்<br>M. கவினேஸ் | 01 |
| | | அருணோதயா இந்து கல்லூரி | | G. பிரவிஞ்சனா<br>B. தர்ஷிகா<br>R. சிடேனியா<br>P. சந்தியா<br>A. ஜெரிட்டன்<br>P. நிமல்ராஜ்<br>B. அபிசேக் | 02 |
| | | ஹைபொரஸ்ட் இல- 03 தமிழ் வித்தியாலயம் | | K. பிரவினா<br>J. கீர்த்திகா<br>S. ஹோமித்தா<br>M. கபிலாஷினி<br>T. வக்ஷன்<br>I. ஹரன்<br>R. ரிசாக்காந் | 03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தமிழமுதம்' இதழாக்க குழு



திரு. டி. திலகேஸ்வரன் (தலைவர்)



திரு. எஸ். செல்வகுமார் (செயலாளர்)



திரு. பி.முகுந்த்கமலவண்ணன் (பொருளாளர்)



திருமதி. ஆர். பிரியதர்சனி (இதழாசிரியர்)

ஆலோசனையும் வழிகாட்டலும் : திரு. கந்தையா காந்தரூபன்
உதவி கல்விப்பணிப்பாளர்
(தமிழ் மொழிக்கான வலய பொறுப்பாளர்)

திரு.சி. ஜனார்த்தனன்
ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
வலய கல்வி பணிமனை வலப்பனை



தமிழமுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org